
# உதயன்

வீலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 05 வியாழக்கிழமை (21-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:230

அழிவுண்டு கிடக்கும் சாவகச்சேரி நகரில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. சாவகச்சேரி இந்துக் கல்லூரியை முதலாவது படத்திலும் டிறிபேர்க் கல்லூரியையும் அதற்கு முன்னால் உள்ள சிறிய நினைவு மண்டபத்தையும் இரண்டாவது படத்திலும் நவீன சந்தைக்கு அருகில் தனங்களப்பு வீதியில் கடைப் பகுதிகளை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## அம்புலன்ஸ் திடீரென தீப்பற்றியது

வவுனியா,செப்.21

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மற்றும் நோயாளர்கள் உட்பட 18 பேரை ஏற்றி வந்த - கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான - அம்புலன்ஸ் வண்டியில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து வரும் வழியில் பூவரசங்குளம்பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற

(12ஆம் பக்கம் பார்க்க)

### சடலங்கள் கையளித்த வேளை

## படையினர் ஏவிய குண்டே குறி தவறி வீழ்ந்தது!

### ஊடகத் தகவல் நிலையம் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.21

போர்க்களத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்களை ஒப்படைக்கும் பணி நேற்று முன்தினம் குழம்பியதற்கு - அச்சுவேலிப் பகுதியிலிருந்தும் பலாலியில் இருந்தும் சாவகச்சேரியை நோக்கிப் பல்குழல் பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டவேளை அவற்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சாவகச்சேரி நகரம் சுடுகாடுபோல் காட்சி!

## அங்கு சென்று திரும்பிய பத்திரிகையாளர் விவரிப்பு

கொழும்பு,செப்ரெம்பர்21

**கடந்த நான்கு மாத காலத்துக்கும் மேலாக படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் யுத்தம் நடைபெற்ற சாவகச்சேரி நகரப் பிரதேசம் அழிவுண்டு சுடுகாடு போலக் காட்சியளிக்கின்றது.**

**நேற்றுப் படையினரால் அங்கு அழைத்துச் செல்லப்பட்ட கொழும்புப் பத்திரிகையாளர்கள் அந்த நகரின் அழிவுக் காட்சியை மேற்கண்டவாறு விவரித்துள்ளனர்.**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் 48பேர் அடங்கிய குழுவினர் கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவரப்பட்டனர். சாவகச்சேரி, கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் அண்மையில் படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்கு அவர்கள் பின்னர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சாவகச்சேரி நகரில் பிரதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,செப்.21

வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 7 விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயர்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:-

கடந்த 17 ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மேஜர் தமிழ்வாணன் (சின்னவன் குணபாலசிங்கம் - யாழ்ப்பாணம்), வீரவேங்கை பிரதீபா (கனகரத்தினம் சியாமளா - கிளிநொச்சி) ஆகியோரும் -

கடந்த 18ஆம் திகதி வீரவேங்கை அகரச்செல்வி அல்லது சுதாமதி (நடராசா இந்திராதேவி - யாழ்ப்பாணம்), வீரவேங்கை வனஜா அல்லது நிலவரசி (பெரியண்ணன் ஜெயமேரி - மன்னார்) ஆகியோரும்-

இதே தினத்தில் அரியாலைப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை மணிமொழி (வேதநாயகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் குழு வருகை; நேற்று குண்டுச் சத்தங்கள் ஓய்வு!

யாழ்ப்பாணம்,செப்.21

உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் 48 பேர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

விசேட விமானம் மூலம் கொழும்பிலிருந்து வந்த இவர்கள் படையினரின் பாதுகாப்புடன் யாழ்.நகரப் பகுதி உட்பட பல இடங்களுக்கும் விஜயம் செய்தனர். சாவகச்சேரியில் படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்கும் பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன்னதாக இவர்கள் பலாலியில் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று முன்தினம் கடலுக்குச் சென்ற

## குருநகர் மீனவர் ஐவர் கரை திரும்பவில்லை!

குருநகர்,செப்.21

குருநகர் இறங்குதுறையிலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் ஐவர் நேற்று மாலைவரை கரை திரும்பவில்லை.

கலை 8 மணிக்கு குடாக்கடலுக்குப் புறப்பட்ட இவர்கள் பூவரசம்தீவுக்கும், மண்ணித்தலைக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்ததைக் கண்டதாக அன்று மாலை கரை திரும்பிய ஏனைய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை மாவட்டத்துக்கான

## கூட்டணியின் வேட்புமனுவை நீதிமன்றம் நிராகரித்தது!

கொழும்பு,செப்.21

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை நிராகரிக்கும்படி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

விசேட தேர்தல் நீதிமன்ற நீதியரசாக இயங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அசோகா டி சில்வா இந்த உத்தரவை நேற்று வழங்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்

(12ஆம் பக்கம் பார்க்க)


## ஹெலி விபத்து அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,செப்.21

கடந்த 16ஆம்திகதி அரநாயக்க பகுதியில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்து தொடர்பான பூர்வாங்க விசாரணை அறிக்கை நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் மரண விசாரணை அறிக்கைகள் மாவனல்ல நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அரநாயக்க பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-8-10)



கொழும்புத்துறை பிரதான வீதியின் ஒரு பகுதியையும் அப்பகுதியில் சேதமடைந்துள்ள வீடு ஒன்றினையும் மேலேயுள்ள படங்களில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை வளர்ச்சியில்
அக்கறை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவரும்,
பாடசாலையின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளருமான

### திரு.நமசிவாயம் சிவகுமார்

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமைக்காக எமது பாடசாலைச் சமூகம் அவரைப் பெருமிதத்துடன் பாராட்டி வாழ்த்துகின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

(78614)

---

### யா/புங்குடுதீவு
### ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய
### பழைய மாணவர் சங்க
### அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம்

14.05.2000 ஞாயிற்றுக்கிழமை அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட மேற்படி கூட்டம் எதிர்வரும் 24.09.2000ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல பழைய மாணவர்களையும் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றி சங்க உறுப்பினராக இணையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்

- அதிபர்

(78627)

---

## திருமறைக்கலாமன்றம்
## கவின் கலைகள் பயில்கம்

எமது பயிலகத்தினால் நடத்தப்பட்டுவரும் சங்கீத, நடன வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் மாணவர்களையும் பெற்றோர்களையும் 23.09.2000 சனி மு.ப. 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்துக்கு சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 2393*

(C/13014)

---

### மோசமான வீதி

யாழ்ப்பாணம்,செப்.21

நல்லூர் கொண்டலடி வீதி பல வருட காலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது. அத்துடன் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் சிரமப்படுத்தான் போக்குவரத்துச் செய்யவேண்டியுள்ளது. பருவமழை நெருங்குவதால், அதற்கு முன் இவ்வீதியைத் திருத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர். (இ)

---

**A/L**
**நாடகமும் அரங்கியலும்**
**2001 / 2002**
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
**ஆசிரியர்: யோண்சன்**
**BITSMAN TUTION CENTRE**
(78628) **மானிப்பாய்.**

---

## ராஜா
(யாழ்ப்பாணம்)

**கார்த்திக், ரோஜா, அஜித்**
மற்றும் பலரின் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)

(C/12920)

---

## நாகம்ஸ்
(இணுவில்)

**விஜய், சிம்ரன், மணிவண்ணன்** நடிப்பில்
இனிய பாடல்கள் நிறைந்த
உள்ளம் கொள்ளை
கொள்ளும் பல்சுவை
ததும்பிய காதல் காவியம்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

---

### யாழ்.பல்கலைக்கழக
### புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில்
### இலங்கை பற்றிய அடிப்படைக் கல்வி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இலங்கை பற்றிய அடிப்படைக்கல்வி இம்மாதம் 30.09.2000 சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடங்கி 12 மணிவரை இடம்பெறும்.

* இது பொது அறிவு, பொது உளச்சார்பு, ஸ்ரீலங்கா நிர்வாக சேவை, க.பொ.த.உயர்தரம், கலை முதற் தேர்வு, வணிக முதற் தேர்வுகளில் கல்வி பயிலும் மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கருத்திற் கொண்டு திட்டமிடப்பட்ட கற்கை நெறி ஆகும்.
* 29.09.2000 வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கு முன்பதாக புறநிலைப் படிப்புகள் அலகு அலுவலகத்தில் இலங்கையின் கல்வியை அறிய விரும்பும் ஆர்வலர்கள் எவரும் பதிவு செய்து கொள்ளலாம் என்பதை அலகின் இணைப்பாளர் தெரிவித்துக் கொள்கின்றார்.

இணைப்பாளர்,
புறநிலைப் படிப்புகள் அலகு.

(C/13012)

---

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் வ.மே. கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும், மஞ்சத்தடி விவேகானந்த சனசமூகநிலையத்தின் போஷகரும், நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவருமான

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி தவஜோதி

அவர்கள் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கிராம அபிவிருத்திச் சங்கம்,*
*இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த சன சமூக நிலையம்,*
*இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத*
*சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இளைஞர்கள்.*

(78624)

---

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர்

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி தவஜோதி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.14 ப.நோ.கூ. சங்கம்,**
**மானிப்பாய் வீதி,**
**ஆனைக்கோட்டை,**
**கிளைக் குழுவினர்.**

(78626)

---

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவரும்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவருமாகிய

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி தவஜோதி

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,

*காரைநகர் ப.நோ.கூ. சங்கம்,*
*காரைநகர்.*

(C/13016)

---

## பொதுத் தேர்தல் 2000 - யாழ்ப்பாண மாவட்டம்

யாழ். மாநகரசபையின் முன்னாள் கணக்காய்வாளரும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சு முன்னாள் நிர்வாக உத்தியோகத்தரும், மூதூர் பிரதேச முன்னாள் உதவி அரசாங்க அதிபரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தொகுதி பிரதம அமைப்பாளருமான திருவாளர் விநாசித்தம்பி வைத்திலிங்கம் (விசுவப்பா) அவர்களை வெற்றி பெறச் செய்யுங்கள்.



| | | |
|---|---|---|
| திரு. வி. வைத்திலிங்கம் | இல. | X |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | X | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

உதய சூரியனுக்கு புள்ளடி இடுவதோடு எனது வேட்பாளர் தெரிவு இலக்கமாகிய இலக்கம் X க்கு மேலேயும் புள்ளடி இட்டு எனது வெற்றியை உறுதிப்படுத்துமாறு எனது நண்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள், அனைத்து யாழ்.மாவட்ட மக்களையும் பணிவன்போடு வேண்டிக் கொள்கின்றேன். இங்ஙனம்

(78232) **விளம்பரம் இல்லாத சேவையாளன் - வி.வைத்திலிங்கம்**

---

## யாழ்.மாவட்டம்

அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
எனது அரசியல் நண்பர்களே!
உதய சூரியனுக்கு X இட்டு
தமிழர் விடுதலைக் கூட்டணியை
வெற்றி பெறச் செய்யுங்கள்.

எனது இலக்கமான 10 க்கு மேலே
புள்ளடி இட்டு ஆதரியுங்கள்.
உங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்
(தமிழரசு) க.சின்னத்துரை
உபதலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி



தமிழ் ஈழத் தந்தை
எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

X



(தமிழரசு)
க. சின்னத்துரை

(78233)

---

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவரும்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவருமாகிய

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்
அன்புத் துணைவியார்

### திருமதி தவஜோதி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்,**
**பணிப்பாளர், பணியாளர்.**

*தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்,*
*தெல்லிப்பழை.*

(C/13006)




## பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளிடமிருந்து இரு பணயக் கைதிகள் தப்பினர்!

மணிலா,செப்.21

பிலிப்பைன்ஸில் ஜோலோ தீவில் இஸ்லாமிய 'அபு சாயப்' தீவிரவாதிகளால் பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் இரவு தப்பி வந்துள்ளனர்.

பணயக்கைதிகளை விடுவிக்க பிலிப்பைன்ஸ் இராணுவம் தீவிரவாதிகள் மீது தாக்குதல் தொடுத்துள்ள நிலையில் இவர்கள் தப்பியுள்ளனர்.

இதற்கிடையில தீவிரவாதிகள தங்கியுள்ள ஜோலோ தீவில் இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் 10 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், மேலும் பலா காயமடைந்துள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் மலேசியாவிலிருந்து வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் உட்படப் பலரைக் கடத்திப் பிலிப்பைன்ஸில் பணயக் கைதிகளாக வைத்துள்ள தீவிரவாதிகள் மீது பிலிப்பைன்ஸ் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. (ஒ)

பிலிப்பைன்ஸில் பணயக்கைதிகளை விடுவிக்க ராணுவப் பலத்தைப் பிரயோகிப்பதால் பணயக்கைதிகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று அச்சத்தில், அவர்களின் உறவினர்கள் ராணுவத் தாக்குதலை நிறுத்தும்படி கோரி ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

## பயணிகளுடன் கடத்தப்பட்ட விமானம் கடலில் விழுந்ததில் பலர் இறந்தனர்!

### 9பேர் மட்டும் உயிர் தப்பினர்!!

ஹவானா,செப்.21

தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட விமானம் கடலில் விழுந்ததில் அதிலிருந்த பலர் கொல்லப்பட்டனர். 9 பேர் மட்டும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இரு நாள்களுக்கு முன்னர் கியூபாவில் இருந்து அமெரிக்கா செல்லவிருந்த ரஷ்யத் தயாரிப்பான 'அன்ரனோவ்' விமானம் ஒன்று 18 பயணிகளுடன் புறப்பட்ட சிறிது நேரத்தில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த விமானம் விபத்துக்குள்ளாகி புளோரிடா கடல் பகுதியில் விழுந்ததாகவும் -

விமானத்தில் இருந்த பலரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் தற்போது கூறப்படுகிறது.

விமானம் விபத்துக்குள்ளான சமயத்தில், அப்பகுதியில் சென்று கொண்டிருந்த வர்த்தகக் கப்பல் ஒன்றின் பணியாளர்களால் விமானப் பயணிகளில் 9பேர் காப் பாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

### ஒலிம்பிக் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை

ஹைதராபாத்,செப்.21

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்றுவரும் ஒலம்பிக் போட்டிகளில் 69கிலோகிராமுக்கு உட்பட்ட மகளிருக்கான பளுதூக்கும் போட்டியில் இந்திய வீராங்கனையான கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையான இவருக்கு மத்திய அரசு 6லட்சம் ரூபாவும், இவரது சொந்த மாநிலமான ஆந்திரப் பிரதேச அரசு 10லட்சம் ரூபாவும் பரிசளித்துள்ளன.

### பாண்டிச்சேரி த.மா.காவில் பிளவு

புதுவை,செப்.21

பாண்டிச்சேரி சட்டசபையில் த.மா.கா. உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது.

அக்கட்சியின் சட்டசபை உறுப்பினர்களில் 3பேர் தம்மைத் தனிக் குழுவாகக் கருதும்படி சபாநாயகரிடம் கடிதம் சமர்ப்பித்துள்ளனர்.

இவர்களின் பிரிவால் அங்கு த.மா.கா. ஆதரவுடன நடத்தப்படும காங்கிரஸ் ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது.

### தமிழகத்தில் தொலைத்தொடர்பு பாதிப்பு!

இந்தியாவில் தொலைத்தொடர்புத் துறையைச் சேர்ந்த பொறியியலாளர்களும், அதிகாரிகளும் நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் தமிழகம் உட்பட பல மாநிலங்களில் வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### முதல்வர் கருணாநிதியின் மகனான

# அழகிரியுடன் தொடர்புகொள்ள தி.மு.கவினருக்குத் தடைவிதிப்பு!

## ஆதரவாளர்கள் வன்முறை; மதுரையில் கடும் பதற்றம்!



மு.க.அழகிரி

மதுரை,செப்ரெம்பர்21

**தமிழக முதல்வர் கருணாநிதியின் மகனான மு.க. அழகிரி கட்சிக் கட்டுப்பாட்டை மீற் நடப்பதால் அவருடன் தி.மு.க. தொண்டர்கள் எவரும் தொடர்பு வைத்திருக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து மதுரை மாவட்டத்தில் பல அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றதால் அங்கு பதற்றம் நிலவுகிறது.**

தமிழக முதல்வர் கருணாநிதியின் காலஞ்சென்ற முதல் மனைவியின் மகன்களின் ஒருவரான மு.க. அழகிரி மதுரையில் வசித்து வருகிறார். மதுரை மாவட்டத்தில் கட்சி விவகாரங்களில் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சினைகளிலும் மு.க. அழகிரி ஆதிக்கம் செலுத்தியதாகவும் மதுரையில் ஒரு குறுநில மன்னரைப் போல அவர் நடந்து கொள்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வந்தன.

கருணாநிதியின் இரண்டாவது மனைவியின் மகனும் சென்னை மேயருமான ஸ்டாலினுக்கும் அழகிரிக்கும் இடையில் இருந்த பனிப்போர் அதிகரித்திருப்பதாகவும் கூறப்பட்டு வந்தது.

இந்த நிலையில் -

தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் கட்சியினர் எவரும் அழகிரியுடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்று நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். கருணாநிதியின் ஒப்புதலோடு வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பினால் கோபமடைந்த அழகிரியின் ஆதரவாளர்கள் மதுரையில் அரசு பஸ்களுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். அத்துடன் பல வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டனர். இதனால் அங்கு கடும் பதற்ற நிலை நிலவுகிறது.

இந்த உத்தரவு வெளியான பின்னர் அதனை மீறி தி.மு.கவைச் சேர்ந்த மதுரை நகர மேயர் உட்பட கட்சியின் பல முக்கிய பிரமுகர்கள் அழகிரியைச் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழக சட்ட சபைத் தேர்தல் நெருங்கும் இந்தச் சமயத்தில் அழகிரியுடனான முறுகல் நிலை தி.மு.கவுக்கு மதுரை உட்பட தென் மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

உலக அரங்கில்

### ராமதாஸ் மீதான கல்வீச்சு எதிரொலி

## தமிழகத்தில் பல இடங்களில் தலித்துக்கள் மீது தாக்குதல்கள்!

சென்னை,செப்.21

பா.ம.க.தலைவர் ராமதாஸ் பயணம் செய்த கார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் 'விடுதலைச் சிறுத்தைகள்' என்ற தலித் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று வதந்திகள் பரவியதை அடுத்துத் தமிழகத்தில் பல இடங்களில் பா.ம.கவினர் தலித்துக்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்.

ராமதாஸ் மீதான தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் தலித்துக்களின் குடியிருப்பு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதில், 25 குடிசைகள் சாம்பலானதாகவும், 70 வயது முதியவர் ஒருவர் உடல் கருகி மாண்டதாகவும் கூறப்படுகிறது.

வேறொரு சம்பவத்தில் அரசுப் பேருந்து மீது கலவரக் கும்பல் ஒன்று கல்வீசித் தாக்கியதில் இரு குழந்தைகளுக்குத் தாயான ரேவதி என்ற பெண் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார். (ஒ)

## இந்தோனேசியாவின் சிக்கல்களுக்கு அமெரிக்கா முக்கியமான காரணம்!

### அமைச்சர் மஹ்வுட் குற்றச்சாட்டு

ஜகார்த்தா,செப்.21

இந்தோனேசியா எதிர்கொண்டு வரும் சிக்கல்களுக்கு அமெரிக்கா ஒரு முக்கிய காரணம் என்று அந்நாட்டின் பாதுகாப்பமைச்சர் மஹ்வுட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மற்றும் மேற்குத் திமோரில் செயற்பட்டுவரும் ஆயுதக் குழுக்களை அடக்குவதற்குத் தேவையான ஆயுதங்களை அமெரிக்கா இந்தோனேசியாவிற்குத் தரவில்லை என்றும் -

தமது நாட்டுடனான இராணுவ உறவுகளை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளதால், தமது படையினர் கடும் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் தெரிவித்த மஹ்வுட் -

இந்தோனேசியாவிற்கு உதவ வேண்டும் என்று அமெரிக்கா உண்மையில் விரும்பினால், தமது நாட்டின்மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்றும் கூறினர்.

இதேசமயம் -

ஆயுதக் குழுக்களை கலைப்பதாக உறுதியளித்தால் மட்டுமே இந்தோனேசியாவிற்கு இராணுவ ஒத்துழைப்பு மீண்டும் வழங்கப்படும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் கோஹன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்தோனேசிய அரசு, கிழக்குத் திமோர் சுதந்திரநாடாக மாறுவதற்குக் காரணமான தேர்தலின் முக்கியத்துவத்தை உணர மறுப்பதாகவும், அரசு ஆதரவுடன் செயற்படும் ஆயுதக் குழுக்கள் பலம் பெற்று வருவதாகவும் கூறினார்.

கிழக்குத் திமோரின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க, இந்தோனேசிய அரசு ஆயுதக் குழுக்களை வளர்த்ததாகக் கூறி அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது (ஒ-4)

### சீனாவில் குப்பையிலிருந்து ஓடுகள் தயாரிப்பு!

பெய்ஜிங்,செப்.20

குப்பையிலிருந்து ஓடு தயாரிக்கும் தொழில்நுட்பத்தை சீனர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சதுரமானதாகவும், பலவர்ணங்களிலும் உள்ள இந்த ஓடுகள், செங்கற்களுக்கு இணையான உறுதியை உடையதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## மீன் பிடிப்பதில் எல்லைத் தகராறு; ஆந்திராவில் தமிழக மீனவர் சிறை!

சென்னை,செப்.21

தமிழகத்தைச் சேர்ந்த 63 மீனவர்களை ஆந்திர மாநில மீனவர்கள் சிறைப்பிடித்துள்ளனர்.

காற்றோட்டம் காரணமாக தற்போது தமிழகக் கடல் பகுதியை விட ஆந்திர மாநிலக் கடல் பிரதேசத்தில் மீன் வளம் அதிகம் காணப்படுகிறது.

இதனால் 63 தமிழக மீனவர்கள் விசைப்படகுகளில் சென்று அங்கு மீன் பிடித்தனர். அப்போது ஆந்திர மீனவர்கள் தமிழக மீனவர்களைத்தாக்கிச சிறைப்பிடித்துச் சென்றுள்ளனர்.

சில நாள்களின்முன்னர் ஆந்திரப் பிரதேசக் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது சிறைப்பிடிக்கப்பட்ட 72 தமிழக மீனவர்களை ஒரு லட்சம் ரூபா அபராதமாகப் பெற்றுக்கொண்டு ஆந்திர மீனவர்கள் விடுவித்திருந்தனர். (ஒ-8)

## ஜோர்தானிய நீதிமன்றத்தில் 6 பேருக்கு மரணதண்டனை

அமெரிக்க, இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகவும், சர்வதேசப் பயங்கரவாதி பின்லேடனுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவும் குற்றம்சாட்டப்பட்ட 6 முஸ்லிம்களுக்கு ஜோர்தான் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

பின்லேடனுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 28 பேருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த இந்த வழக்கில் இருவருக்கு ஆயுள் தண்டனையும், சிலருக்கு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. 6 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

விசாரணையின்போது குற்றவாளிகள் அனைவரும் பின்லேடனுடன் தம்மைத் தொடர்புபடுத்துவதை மறுத்ததுடன், அமெரிக்கர்கள், இஸ்ரேலியர்கள் ஆகியோருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவே தாம் தீர்மானித்திருந்ததாகத் தெரிவித்திருந்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் குற்றவாளிகளின் சட்டத்தரணி, அமெரிக்காவைத் திருப்திப்படுத்தவே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும், இதன் பின்னணியில் பெரும் அரசியல் சதி இருப்பதாகவும் தெரிவித்தார்.

குற்றவாளிகளில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களின் முக்கிய தலைவர்களும் அடங்கியுள்ளனர்.

அத்துடன் பலஸ்தீன தளபதிகளில் ஒருவரான முனிா மஹ்டா கைது செய்யப்படாத நிலையில் அவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# அமெரிக்க விசாவைப் பெற புதிய நடைமுறை அமுல்

கொழும்பு, செப். 21

அமெரிக்க விசா பெறுவதில் இடைத் தரகர்களின் துஷ்பிரயோகங்களை அகற்றுவதற்கும், விசாபெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கும் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் புதிய நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தகவல் நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தப் புதிய நடைமுறைகள் குறித்து அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:–

எதிர்வரும் 26ஆம்திகதியிலிருந்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசா பெறுவதற்காக விண்ணப்பிக்க விரும்புவர்கள் நேர்முக விசாரணைக்காக முன்கூட்டியே அனுமதியைப் பெற வேண்டும்.

வார நாள்களில் பிற்பகல் ஒரு மணியில் இருந்து 3 மணி வரை அவர்கள் இதனை மேற்கொள்ள முடியும்.

நேர்முக விசாரணைக்கு முன்கூட்டியே அனுமதி பெறுவதற்காக, விசா பெறுவதற்கு விண்ணப்பித்தவரே சமுகமளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. விசா விண்ணப்பத்துடன் 45 அமெரிக்க டொலர்களைச் செலுத்தும் பட்சத்தில் நேர்முக விசாரணைக்கான திகதியையும் நேரத்தையும் உள்ளடக்கிய சிட்டை ஒன்று வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் சிட்டையில் குறிப்பிட்ட திகதியில் நேர்முக விசாரணைக்குச் சமுகமளிக்க வேண்டும். நேர்முக விசாரணை நடைபெறும் தினத்தன்றே விசாவும் வழங்கப்படும்.

விசாவுக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் தூதரக ஆலோசகரால் அதற்கான காரணங்கள் கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–9–4)

## நாய்களுக்குத் தடுப்பூசி

அச்சுவேலிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி போடுவதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை — முற்பகல் 9. 30 மணி தொடக்கம் 11 மணிவரை அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்திலும், 11.30 மணி தொடக்கம் 1 மணிவரை நாவற்காடு கலாநிதி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1. 15 மணி தொடக்கம் 2. 15 மணிவரை அச்சுவேலி தெற்கு கலைமகள் சனசமூக நிலையத்திலும், 2.30மணி தொடக்கம் 4மணி வரை அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிதொடக்கம் 10. 30 மணிவரை தோப்பு கலைமகள் சனசமூக நிலையத்திலும், 11 மணி தொடக்கம் 12. 30 மணி வரை பத்தமேனி ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1 மணி தொடக்கம் 2. 30 மணிவரை தம்பாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திலும், 2. 45 மணி தொடக்கம் 4 மணி வரை இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.


நாய் வளர்ப்பவர்கள் தவறாது தமது நாய்களைக் கொண்டு வந்து தடுப்பூசியை ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பரிசளிப்பும் கட்டடத் திறப்பு விழாவும்

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், கல்லூரிக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கட்டடத்தைத் திறந்து வைப்பதுடன் பரிசில்களை வழங்குவார். (இ—7)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 01 — 07 — 1978

ஆண்டவன் அடியில் 21 — 09 — 1993

செல்வன்

### குமாரகுலசிங்கம் சிவகுமாரன்

ஆண்டு ஏழு சென்றாலும் ஆறுமோ
எமதுதுயர்? எங்கள் குடும்பத்தின் இணையற்ற
ஜோதியே! எங்குதான் சென்றீரோ?
மண் வாழ்வில் நாம் கண்ட துன்ப விழா
பொன் மலராய் உனை ஏந்தி மகிழ்ந்தோமடா
விண்மலரே! எமக்காக வேண்டுவாயே!
ஏழாண்டு என்ன ஏழாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உன்னை என்றும் மறவாத...

அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, அத்தான்மார், மருமக்கள்

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (78590)

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 1930 — 11 — 24

உதிர்வு 1999 — 09 — 21

திருமதி

### சுப்பிரமணியம் கனகம்மா

(வான்மதி நகை அகம்—உரிமையாளரின் அன்புத்தாயார்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது!
ஆறவில்லையம்மா உங்கள் பிரிவுத் துயர்
ஆறுதல் கூற எமக்கு யாரம்மா இங்கு?
ஆசையாய் ஒரு தரம் வாராயோ எம்மிடத்தில்;
ஆவலாய்க் காத்திருக்கின்றோம் மீண்டும்
ஒரு முறை எம்மோடு வந்து விடு அம்மா!
ஓம் சாந்தி!!

உங்கள் பிரிவினால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:-
பொற்றொழிலாளர் வீதி,
தட்டாதெரு,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:-
சந்தை வீதி,
உடுப்பிட்டி.
(78585)

## விவரங்களைப் பதியுமாறு கோரிக்கை

தற்போதைய இடப்பெயர்வுக்கு முன்னர் தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்த சகல வகுப்புகளையும் சேர்ந்த மாணவர்களின் கொடுப்பனவுகளை சீர்செய்யும் பொருட்டு– இணுவில் மத்திய கல்லூரியிலும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இயங்குகின்ற கல்லூரி அலுவலகத்தில் மாணவர்கள் தமது விவரங்களை பாடசாலை நேரத்தில் பதிவு செய்யுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ரி)

## கண்ணீர் அஞ்சலி

எமது விரிவுரையாளர்
V. A. சுப்பிரமணியம் அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி ஆறுமுகம் மீனாட்சி

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதுடன், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்
முகாமைத்துவ கற்கைகள்,
வணிக பீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(78630)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா பொன்னையா

அனலைதீவு தெற்கு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா பொன்னையா 20–9-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா, ஐயாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி முத்துசாமியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், குணவதி (கனடா), துரைராசா (ACLG' S Office, யாழ்.), உமாராணி (கனடா), நாகேஸ்வரி, இரஞ்சிதமலர், சுந்தரலிங்கம் (கனடா), தனபாலசிங்கம் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராசா(கனடா), ஸ்ரீதேவி, யோகராசா (கனடா), இராஜசூரியன், ஸ்ரீகல்யாணி (கனடா), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மற்றும் விமலசேனன் (நோர்வே), குமாரராஜன் (கனடா), மோகனராஜா (லண்டன்), நவதாரணி (கனடா), சிவாஜினி (மருத்துவ பீடம், யாழ்), தர்மிளா (மருத்துவ பீடம், யாழ்.), அனுஜன் (யாழ் இந்து)இரவீந்திரநாததாசன்(கனடா),சங்கர்(கனடா), கிரிஜா (கனடா), விஜிதா (கனடா), பிரதாபன் (கனடா), லோசனா (கனடா), தயாகர் (பிரான்ஸ்), தயாளினி (ஜேர்மனி), கவிதா, கவிரஞ்சன், சிந்துஜா (கனடா), பிரசன்னா (கனடா), சியானுஜா (கனடா), பிரவீனன் (கனடா), நிஷந்தன் (கனடா), ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21–9-2000) வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு 203, நாவலர் வீதி, யாழ். இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ. துரைராசா (மகன்)

203, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (78621)

### தோமஸ் அன்னம்மா

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வளன்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட தோமஸ் அன்னம்மா சில்லாலையில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சவிரிமுத்து தோமஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை சபினா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இம்மனுவேல் (C. W. E.) மற்றும் சந்திரா, மணி ஆகியோரின் அன்புத் தாயாரும் மற்றும் இராசேந்திரம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் – தற்போது I. C. R. C.), ஜஸ்ரின் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், றொபினா காலஞ்சென்ற யூட்றொசான் மற்றும் யூட்றொகான், யூட்றோபன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான டென்னிஸ், ஞானம்மா மற்றும் நேசம், புஷ்பம், பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (21-09-2000) வியாழக்கிழமை காலை 9. 00 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. அ. ஜெயசீலன்
(பேறாமகன்)

தற்போதைய முகவரி:
கதிரை மாதா கோயிலடி,
சில்லாலை தெற்கு,
சில்லாலை. (78612)

உதயன்

## ஒளித்துப் பிடிக்கும் பிரசார உத்தி

**இலங்கையில் இதுவரை நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் பலவும் - குறிப்பாக 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் இருந்து - தமிழர் பிரச்சினையை முன்வைத்தே தென்னிலங்கைக் கட்சிகள் வாக்குவேட்டை ஆடுவது வழக்கமாகி விட்டது. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டு, அதிகாரப் பரவல் திட்டத்தை - அரசமைப்புச் சீர்திருத்தத்தை - முன்வைத்தே இம்முறை அவை தெற்கில் வாக்கு வேட்டை நடத்துகின்றன.**

**தேர்தலில் போட்டியிடுவதற்கென காளான்கள் போல் முளைத்த சுயேச்சைக்குழுக்கள் கூட, அரசமைப்புச் சீர்திருத்தம், அதிகாரப் பரவல் திட்டம், போரைத் தொடர்வது, விடுதலைப் புலிகளுடன் பேசுவது, அவர்களை ஒழித்துக் கட்டுவது என்பன குறித்தே பேசவேண்டிய தேவை உருவாகியுள்ளது; உருவாக்கப்பட்டுள்ளது.**

**வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாப் பிரச்சினை, தனியார்மயமாக்கல், உலகவங்கியின் வழிகாட்டுதலில் திட்டங்களைத் தீட்டுவது மட்டுமன்றி அவற்றைச் செயற்படுத்துதல், ஊழல்கள், மோசடிகள், மந்தமான, பாகுபாடான நிர்வாகம் என்று தென்னிலங்கை மக்களை வாட்டும், பாதிக்கும் பல்லாயிரம் பிரச்சினைகளை மறந்த நிலையில் -**

**அதிகாரப் பரவல் திட்டம், அரசமைப்புச் சீர்திருத்தம், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துதல் ஆகிய அம்சங்களையே சகல தரப்புகளும் தூக்கிப் பிடித்தும் பிரசாரம் செய்கின்றன.**

**தமிழர்களுக்குப் பிரச்சினை எதுவும் இல்லை; அவர்களுக்கென உரிமைகளை வழங்க வேண்டியதில்லை; போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும்; என்ற கருத்துக்களை அள்ளி வீசி பேரினவாத அணிகள் பிரசாரம் செய்து வருகின்றன.**

**போரை நிறுத்த வேண்டும்; சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று இரண்டொரு அணிகள் பிரசாரம் செய்யாமல் இல்லை.**

**பிரதான கட்சிகளான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட முழுக்க முழுக்க இனப்பிரச்சினையை குறிவைத்தே தமது தேர்தல் பிரசாரத்தை முடுக்கி விட்டிருக்கின்றன. இரண்டு தரப்பினருமே சில சந்தர்ப்பங்களில் அர்த்தமோ, தர்க்கப் பண்போ இல்லாமல் தேர்தல் மேடைகளில் முழங்குகிறார்கள். இரண்டு தரப்புகளையும் சேர்ந்த தலைவர்களில் சிலர் தாம் என்ன பேசுகிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளாமல் தேர்தல் உரைகளை வீசுகிறார்கள்.**

**மொத்தத்தில், இந்த இரண்டு பிரதான கட்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாம் மேற்கொள்ளவுள்ள உருப்படியான வழிமுறை எது என்பதனைத் திட்டவட்டமாகக் கூறாமல் - விளக்கமாகச் சொல்லாமல் - தேர்தல் பரப்புரைகளால் மோதிக் கொள்கின்றன!**

**ஆளுந்தரப்பாக இருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி, தான் பதவிக்கு வந்தால் ஓகஸ்ட் மூன்றாம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்த வடிவத்திலேயே அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரப் போகிறதா? அல்லது வேறு வடிவத்தில் கொண்டு வருமா? அவ்வாறாயின் புதிய வடிவம் எவ்வாறு அமையும் என்று எதுவுமே சொல்லவில்லை!**

**ஐக்கிய தேசியக் கட்சியோ, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் என்று கூறுகிறது. அனைத்துக் குழுக்களும் இணங்கக் கூடிய அதிகாரபரவல் தீர்வு ஒன்றைக் காணப் போவதாக அது கூறுகிறதே அன்றி ஆட்சி முறை ஒற்றையாட்சியா, சமஷ்டி சார்ந்த ஆட்சியா என்பது குறித்து வாயும் திறக்கவில்லை. அதே போன்று, வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்திலும் எதுவும் பேசவில்லை!**

**ஒட்டு மொத்தத்தில் -**

**இரண்டு பிரதான கட்சிகளுமே முக்கியமான விவகாரத்தில், நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கும் விடயத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடும் உத்தியை - பதவிக்கு வந்த பின்னர் தாம் நினைத்ததைச் செய்வதற்கு வசதியாக - கையாளுகின்றன! பாவம், வாக்காளர்கள்!**

# விபத்துக்கான காரணத்தை அறிய அமைச்சர் பௌஸி அவசரப்படுவது ஏன்?

## அஷ்ரப்பின் மருமகள் கேள்வி

கொழும்பு,செப்.21

அமைச்சர் அஷ்ரப்பின் மரணம் குறித்து பூரண விசாரணை நடத்தி, விபத்துக்கான உண்மைக் காரணத்தை கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் பௌஸி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்குக் காரணம் என்ன? எவர் மீதாவது சந்தேகம் கொண்டுள்ளாரா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் மருமகளும், ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் சார்பாக திகாமடுல்ல மாவட்டத்தில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுபவருமான ஜனாபா றெஹானா மொஹிதீன்பாவா கேள்வி எழுப்பியுள்ளார்.

அஷ்ரப்பின் மரணம் தொடர்பாக எவர் மீது சந்தேகம் கொண்டுள்ளீர்கள்? எவரைக் குறி வைத்து இந்தச் சந்தேகத்தைக் கிளப்பி உள்ளீர்கள்? இந்தக் குழப்பகரமான நிலை தங்களிடம் உருவாகக் காரணம் என்ன? போன்ற பல கேள்விகளையும் அமைச்சர் பௌஸியிடம் அவர் கேட்டுள்ளார்.

இந்தச் சந்தேகங்களுக்கும் ஐயப்பாடுகளுக்கும் தெளிவான விளக்கம் கொண்ட பதில் அறிக்கை ஒன்றை காலம் தாழ்த்தாது தருவீர்களானால் திகாமடுல்ல மாவட்ட மக்களின் கண்ணீருக்கு மதிப்பும் முக்கியத்துவமும் தாங்கள் கொடுக்கிறீர்கள் என நான் கருதுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-9-4)

## வீதியை திருத்த நடவடிக்கை

நீண்ட காலமாகக் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டு. தெற்கு முதலி கோயிலடி வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப்பகுதி சனசமூக நிலையம் மற்றும் அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி கட்சியின் வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவர் என்.திரிலோகநாதன் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி வீதி திருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-9)



கொக்குவில் அருள்மிகு மாத்தனைக் கந்தசுவாமி கோயிலில் ஸ்ரீ தேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணுவுக்கும், இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கும் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அந்தணப் பெருமக்கள் கும்பம் ஏந்தி வருவதை படத்தில் காணலாம். இந்த ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறுகிறது. (ஐ)

## தென்மராட்சி கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்களுக்கு செயலமர்வும் கருத்தரங்கும்

தென்மராட்சி,செப்.21

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோருக்கான குணநலவள உள்ளீடு பற்றிய செயலமர்வும், தரம் 7க்கான இந்துசமயம், தரம் 10,11க்கான வர்த்தகம், இந்து சமயம், விவசாயம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புக்கான பொருளியல் பாட ஆசிரியர்களுக்கான வினாத்தாள் மதிப்பீடு பற்றிய கருத்தரங்கும் எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

குணநலவள உள்ளீடு பற்றிய செயலமர்வுக்கு 1ஏபி,1சி ஆகிய தர பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோரையும் II, III ஆகிய தர பாடசாலைகளின் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

23ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர், பிரதி அதிபர்களுக்கான குணநலவள உள்ளீடு பற்றிய செயலமர்வும் - தரம் 10,11க்கான வர்த்தக பாட ஆசிரியர்கள், ஜி.சீ.ஈ. உயர்தர வினாத்தாள் மதிப்பீடு பற்றியும் பொருளியல் பாட ஆசிரியர்கள் ஆகியோருக்கான கருத்தரங்குகளும் -

24ஆம் திகதி தரம் 10,11க்கான விவசாய பாட ஆசிரியர்கள், தரம் 7,10க்கான இந்து சமய பாட ஆசிரியர்கள் ஆகியோருக்கான கருத்தரங்குகளும் - நடைபெறும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 23ஆம் திகதி தரம் 7,10க்கான இந்து சமய பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெறும். காலை 8.30 மணி முதல் மாலை 4.30மணிவரை இந்தக் கருத்தரங்குகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

# சங்கானை கருமபீடத்துக்கு வங்கி பணிகள் சில மாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.21

மக்கள் வங்கியின் விசேட கருமபீடம் சங்கானையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து மக்கள் வங்கியின் யாழ். கன்னாதிட்டி கிளையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சில பணிகள் அங்கு மாற்றப்பட்டுள்ளன.

சங்கானை கிளையில் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகள் யாவும் தற்போது சங்கானையில் இயங்கும் விசேட கருமபீடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும்-

அப்பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை அந்தக் கருமபீடத்திலேயே மேற்கொள்ளுமாறும் -

மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சங்கானைக் கிளையில் ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகளும் அடுத்த மாதம் முதல் சங்கானைக்கு மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களின் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.21

பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களின் பெயர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் உதயனில் வெளியிடப்பட்டு வருவது தெரிந்ததே.

அந்த வகையில் 14 அரசியல் கட்சிகளினதும் 3 சுயேச்சைக் குழுக்களினதும் விவரங்கள் உதயனில் ஏற்கனவே வெளியிடப்பட்டன. இன்று 3 சுயேச்சைக் குழுக்களின் விவரம் கீழே தரப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் 14, சுயேச்சைக் குழுக்கள் 6 என மொத்தம் 20 கட்சிகள் போட்டியிடுவது தெரிந்ததே.

### சுயேச்சை - 4

#### சின்னம் - ஆமைப்பூட்டு

| வேட்பாளரின் பெயர் | இலக்கம் |
|---|---|
| ★ அசோக ரஞ்சித் சேனநாயக்க | 1 |
| ★ அஹமட் சவாஹிரகே தவான்சே சித்சிறி | 2 |
| ★ இலங்கசிங்க முதியன்சேகே தர்மசேன | 3 |
| ★ ஜயக்கொடி கங்காராகே றோகன தர்ம ஜெயக்கொடி | 4 |
| ★ தல்பாவில விதான கபிலகுமார | 5 |
| ★ பத்திரண பித்தவெலாகே காமினி ஜெயசேகர | 6 |
| ★ மணிக்குஹேவகே நாளினி சந்திரலதா | 7 |
| ★ மஹவிலச்சிகே விமலதேரோ | 8 |
| ★ ராஜகுரு முதியன் சேலாகே சமன் பெணாட் விக்கிரமசிங்க | 9 |
| ★ ஸ்ரீநித் இந்திக்க ஜெயதிலக்க | 10 |
| ★ சமன் குமார ஜயரத்தின | 11 |
| ★ ஹேவா மஸ்கொடகே சோமதாச | 12 |

### சுயேச்சை - 5

(வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு)

#### சின்னம் - முச்சக்கரவண்டி

| | |
|---|---|
| ★ அஹமட் சுல்த்தான் சுபியன் | 1 |
| ★ மீரான் மொகைதீன் சஹீட் | 2 |
| ★ மீராசாஹீப் மொஹமட் றமீஸ் | 3 |
| ★ மொஹமட் யுசன் தம்பி அப்துல் ஹயூம் | 4 |
| ★ மொஹமட் ஹரீம் | 5 |
| ★ மொஹமட் ஜமீல் | 6 |
| ★ மொஹமட் மாருப்தீன் | 7 |
| ★ மொஹமட் முபாரக் | 8 |
| ★ மொஹமட் சக்கரியா | 9 |
| ★ சாகுல் ஹமீட் அசன்கனி | 10 |
| ★ சாகுல் ஹமீட் தைபூர் | 11 |
| ★ சுல்தான் முஹமட் நியாஸ் | 12 |

### சுயேச்சை - 6

(ரெலோ)

#### சின்னம் - கப்பல்

| | |
|---|---|
| ★ சுந்தர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா | 1 |
| ★ கனகலிங்கம் சிவாஜிலிங்கம் | 2 |
| ★ கிருஷ்ணன் கௌரிபாலன் | 3 |
| ★ கிருஷ்ணன் சுப்பையா | 4 |
| ★ நடராசா கனகரத்தினம் | 5 |
| ★ நவரத்தினம் கனேஸ்வரன் | 6 |
| ★ மனுவல்பிள்ளை அலோசியஸ் | 7 |
| ★ ராமநாதன் ஜெயசிங்கம் | 8 |
| ★ வேலாயுதம் சிவசுப்பிரமணியம் | 9 |
| ★ சண்முகம் ஜெயச்சந்திர போஸ் | 10 |
| ★ சிவபாதம் விநோதலிங்கன் | 11 |
| ★ செல்லையா பத்மநாதன் | 12 |

# வாக்காளர் அட்டைகள் அனுப்ப தபாலகத்தில் தனிக் கருமபீடம்

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டில் உள்ள தபாலகங்கள் ஊடாக வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க விசேட தபாலக கருமபீடம் ஒன்று யாழ்.செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த 51 ஆயிரத்தி 7 வாக்காளர் அட்டைகளும் -

காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த 63 ஆயிரம் வாக்காளர் அட்டைகளும் -

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த 59 ஆயிரத்தி 419 வாக்காளர் அட்டைகளும் - யாழ். தேர்தல் திணைக்களத்தால் இந்த விசேட கருமபீடத்திடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இந்த வாக்காளர் அட்டைகள் சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (இ-3-9)

# நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்திய மருத்துவ முகாம்கள்

யாழ்ப்பாணம்,செப்.21

நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் கடந்த ஞாயிறன்று இரு இலவச மருத்துவ முகாம்களை நடத்தியது. கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திலும், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை இடம்பெயர்ந்தோர் முகாமிலும் இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

ஞானபாஸ்கரோதய சங்கத்தில் நடைபெற்ற முகாமில் 40 பேருக்கு நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மருந்து வகைகளும் வழங்கப்பட்டன. முத்துத்தம்பி இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள 28 குடும்பங்களைச் சேர்ந்த 117 பேருக்கு பூச்சி நீக்கும் மருந்து வழங்கப்பட்டது. சிறுவர்களுக்கு சொறி, சிரங்கு நோய்க்கான மருந்தும் வழங்கப்பட்டது. நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனையும் நடைபெற்றது.

இவ்விரு மருத்துவ முகாம்களையும் லயன் டாக்டர் க.பிரதீப்குமாரும் மருத்துவபீட மாணவர்களும், யாழ். மாநகரசபை தாதிய உத்தியோகத்தரும் இணைந்து நடத்தினர். நல்லூர் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

### நாளை

புரட்டாதி 6

வெள்ளிக்கிழமை

*திதி:* நவமி

பிற்பகல் 2.24 வரை.

*நட்சத்திரம்:* திருவாதிரை

முற்பகல் 8.43 வரை.

*சுபநேரம்:* 6.02 - 7.32

*ராகுகாலம்:* 10.32 - 12.02

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

**உரிமைப் போர் ஓர் உலராத காற்று. தடைக் கற்களால் அதைத் தடுத்துவிட முடியாது. அடக்குமுறை அதன் வரயிலைப் பெரிதாக்குமே ஒழிய அடைத்து விடாது. காரணம், நேர்மையும் நியாயமும் உரிமைப் போரின் உபகரணங்களாகும்.**

*- அண்ணாத்துரை*

# சிறுமை கண்டு பொங்கிய திறமை கொண்ட பாரதி!

**மகாகவி பாரதியாரின் நினைவு தினம் கடந்த 11 ஆம் திகதி அனுட்டிக்கப்பட்டது. அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

கவிதை உள்ளம் என்பது என்ன? எல்லா ஜீவராசிகளோடும் அவைகளின் சலனத்தோடும் ஒட்டிக் கொள்ளும் தன்மைக்குக் கவிதை உள்ளம் என்று பெயர். "கவிஞன் புயலைப்பற்றிக் கவிதை எழுதினால் அவன் புயலோடு புயலாய் ஒட்டிக்கொண்டிருப்பான். அன்பை வர்ணித்தால் அவன் அன்பு மயமாய் ஆய்விடுவான். அநீதியைத் தாக்கினால் அவன் உள்ளம் சீறி எழும்" என்று கூறுகிறார் புகழ்மிக்க எழுத்தாளர் வ.ரா.

பாரதியார் கவிதை புனைந்த காலத்தில் பாரதம் அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்தது. சாதிபேதங்கள், மதச்சண்டைகள் மலிந்திருந்தன. மூடநம்பிக்கை அறிவு தொழிற்படாதவாறு மூடி இருந்தது. தமிழன் தமிழனோடு ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகக் கொண்டான். தமிழ் மொழியைவிட ஆங்கிலம் தமிழனுக்குச் சிறந்ததாகத் தெரிந்தது.

இத்தகைய சிறுமைகளை எல்லாம் கண்டு பொங்கினார் பாரதி. பாரத மக்களின் நிலையை எண்ணி நெஞ்சு பொறுக்குதில்லையே என்று நெஞ்சம் துடித்தார் பாரதி.

பாரதத்தை ஒன்றுபடுத்தும் பணியும் பாரதத்தைப் பண்பாடு காக்கச் செய்யும் பணியும் பாரதத்தை விழிப்புறச் செய்யும் பணியும் பாரதியாரை எதிர்பார்த்து நின்றன. பாரதியார் தம்முடைய கவித்திறத்தால் பணியைச் சிறப்பாக ஆற்றினார்.

## செந்தமிழ்க்கவி பாரதி

தமிழ்ப்பணி - உலகு போற்றும் உயர்மொழிகளில் முதலிடம் பெறுவது நமது செந்தமிழ். வானேந்திய மன்னர்களும் அறிவமைந்த புலவர்களும் தமிழ்த்தாயின் தாளேந்தித் தொண்டு புரிந்தனர். சங்க காலத்திலும் அதனை அடுத்து வந்த காலங்களிலும் செழித்து வளர்ந்த தமிழ் ஆங்கிலேயர் ஆட்சியில் வளர்ச்சி குன்றி இருந்தது. வளர்ச்சி குன்றி இருந்த தமிழ் மொழிக்குத் தோளேந்திக் காத்தவர் சுப்பிரமணியபாரதியார் என்பதை அவரது சிஷ்யனாகிய பாவேந்தர் பாரதிதாசன்

*"வானேந்து மன்னர்களும்*
*மானியங்கொள்*
*புலவர்களும் மகிழ்வாய் அந்நாள்*
*தாளேந்திக்காத்த நறும் தமிழ்*
*மொழியைத்*
*தாய் மொழியை உயிரை இந்த*
*நாளேந்திக் காக்குநர் யார்?*
*நண்ணுநர் யார்?*

*என அயலார் நகைக்கும்*
*போதில்*
*தோளேந்திக் காத்த எழிற்*
*சுப்பிரமணிய*
*பாரதியின் நாமம் வாழ்க"*

என்று புகழ்ந்து பாடுகிறார்.

## காலமும் கவிஞனும்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தோன்றியபோது இரு பெரும் பணிகள் அவரை எதிர்பார்த்து நின்றன. ஒன்று இந்திய விடுதலை. மற்றது தமிழ்மொழி வளர்ச்சி.

*என்று தணியும் இந்தச் சுதந்திர*
*தாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமை*
*யின் மோகம்*
*என்றெமதன்னை கை விலங்கு*
*கள் போகும்*
*என்றெமதின்னல்கள் தீர்ந்து*
*பொய்யாகும்.*

என்று இந்திய விடுதலைக்கு ஏங்கிய பாரதியார் தமிழ் மொழியின் வளர்ச்சிகுன்றிய நிலையைக் கண்டு அதைவிடப் பன்மடங்கு ஏங்கினார். "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?" என்று கேட்டார். "நமக்குத் தொழில் கவிதை" என்று இறுமாப்புடன் கூறிய பாரதியார் தமது கவிதை மூலம் தமிழுக்கு வேண்டிய தொண்டுகள் அனைத்தையும் செய்தார்.

"இயன்றவரை தமிழே பேசுவேன்! தமிழே எழுதுவேன்! சிந்தனை செய்வதும் தமிழிலே செய்வேன்" என்று உறுதி பூண்ட பாரதியார் தமிழின் மொழிநடை பற்றி ஆராய்ந்தார்.

**புலவர்**
**ம. பார்வதிநாதசிவம்**

தமிழ்மொழி காலத்துக்குக் காலம் தனது மொழிநடையை மாற்றிவந்தது. அதுவே தமிழ் மொழியின் வளர்ச்சியாக அமைந்தது. திருவள்ளுவரும், சங்கப்புலவரும், இளங்கோவும், கம்பரும் தமிழ் மொழிக்குச் சிறந்த வடிவத்தைக் கொடுத்தனர். அவர்களுக்குப் பின்னர் காலத்தின் தேவை அறிந்து தமிழ் மொழிக்குப் புதுவடிவம் கொடுத்தார் மகாகவி சுப்பிரமணியபாரதியார். தமிழ் வரலாற்றிலேயே தமிழ் மொழிக்குப் புதுவடிவம் கொடுத்தவர்களின் பெயர் என்றும் நிலைக்கும். பாரதியாரும் தமிழுக்கு புதுவடிவம் கொடுத்ததோடு தமிழ் சாதாரண மக்களையும் சென்றடையச் செய்தார். அதனால் பிறநாட்டினரும் அவரைப் போற்றினர். இதனைப் பாரதியார்

*"புவியனைத்தும் போற்றிட வான்*
*புகழ் படைத்துத்*
*தமிழ் மொழியைப் புகழிலேற்றும்*
*கவியரசர் தமிழ் நாட்டுக்கில்லை*
*யெனும்*
*வசையென்னாற் கழிந்ததன்றே*
*சுவைபுதிது பொருள் புதிது*
*வளம்புதிது*
*சொற்புதிது சோதிமிக்க*
*நவகவிதை எந்நாளும் அழியாத*
*மாகவிதை "என்றுநன்கு"*

எனக் கூறுகின்றார்.

## சமுதாயப் பார்வை

தேச விடுதலையையும், தமிழ் மொழியையும் தமிழ்நாட்டையும் பாடிய பாரதியார் சமுதாயத்தையும்



உற்றுநோக்கினார். ஆங்கிலேய ஆட்சியில் இந்தியா முழுவதுமே வறுமை நோய் பரவியிருந்தது. பசியினால் வாடும் மக்களைப் பார்த்த பாரதியார்

*"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்*
*- இங்கு*
*வாழும் மனிதருக்கெல்லாம்"*

என்றார். பசித்தவர்கள் எல்லோருக்கும் உணவு கொடுத்து உடனே அவர்களது பசியைப் போக்க வேண்டும். உணவைக்கொடுத்துப் பசியைப் போக்கினால் மட்டும் போதுமா? போதாது அவர்களை உழைக்கவும் தூண்டவேண்டும். அவர்களுக்கு உழைக்கக் கல்வியைக் கொடுக்க வேண்டும்.

இதனை -

*"பயிற்றிப்பல கல்வி தந்து -*
*இந்தப்*
*பாரை உயர்த்திட வேண்டும்"*

என்றார்.

குழந்தை மனத்திலேயே நல்ல கருத்துக்கள் விதைக்கப்பட வேண்டும் என்பதை நம்பிய பாரதியார் பாப்பா பாட்டில் மேலோர் என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் பொழுது *"நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்"* என்று விளக்குகிறார். பாப்பா எதிர்காலத்தில் சான்றோனாக வாழ்வதற்கு வேண்டிய கருத்தை

*உயிர்களிடத்தில் அன்பு*
*வேண்டும் - தெய்வம்*
*உண்மையென்று தானறிதல்*
*வேணும்.*
*வயிரமுடைய நெஞ்சு வேணும்-*
*இது*
*வாழும் முறைமையடிபாப்பா*

என்று கூறுகிறார்.

தமிழ் மொழிப்பற்றுச் சிறு பிராயத்திலேயே ஏற்படவேண்டும் என விரும்பிய பாரதியார் *"சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா"* என்று கூறுகிறார்.

## தன்னம்பிக்கை

மனித வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தடையாய் இருப்பது தன்னம்பிக்கை இன்மையாகும். பாரதியார் மிகுந்த தன்னம்பிக்கையுடையவர். அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் தன்னம்பிக்கையை ஊட்டுபவர். நடந்தவை பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று கூறுகிறார். நடக்க இருப்பவை பற்றித் திடமாக இருக்கும்படி அறிவுரை கூறுகிறார்.

*"சென்றதினி மீளாது மூடரேநீர்*
*சென்றதையே எப்போதும்*
*சிந்தை செய்து*
*கொன்றழிக்கும் கவலையெனும்*
*குழியில் வீழ்ந்து*
*குமையாதீர் சென்றதனைக்*
*குறித்தல் வேண்டாம்.*
*இன்று புதிதாய் பிறந்தோம்*
*என்று நீவிர்*
*எண்ணமனதைத் திண்ணமுற*
*இசைத்துக் கொண்டு*
*தின்று விளையாடி இன்புற்றி*
*ருந்து வாழ்வீர்*
*தீமையெல்லாம் அழிந்துபோம்*
*திரும்பி வாரா"*

என்கிறார்.

## கல்விபற்றிப் பாரதியார்

இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டதற்கும் அடிமை வாழ்வு விரைந்து நீங்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு பலருக்கும் ஏற்படாததற்கும் கல்வி அறிவு இன்மையே மூலகாரணம் என்று பாரதியார் நம்பினார்.

*"அறிவை வளர்த்திட வேண்டும்*
*- மக்கள்*
*அத்தனை பேருக்கும் ஒன்றாய்*

என்றார்.

*"இன்னறுங்கனிச்சோலைகள்*
*செய்தல்*
*இனியநீர்த்தன சுனைகள்*
*இயற்றல்*
*அன்னை சத்திரம் ஆயிரம்*
*வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி யொளிர*
*நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியம்*
*கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி*
*வித்தல்"*

என்றார்.

கல்வி ஆண், பெண் இருபாலாருக்கும் வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

*கண்கள் இரண்டினில் ஒன்றைக்*
*- குத்திக்*
*காட்சி கொடுத்திடலாமோ?*
*பெண்களறிவை வளர்த்தால் -*
*வையம்*
*பேதைமை யற்றிடுங் கண்டீர்"*

என்று பாடினார்.

## கருத்தில் துணிச்சல்

தனக்குச் சரி என்று பட்டதை உலகமே எதிர்த்தாலும் துணிந்து கூறுபவன்தான் உண்மைக்கவிஞன். பாரதி உண்மைக் கவிஞன். ஆதலால் புதிய ஆத்திசூடியில் தனக்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறுகிறார்.

சோதிடக் கலையை உலகம் போற்றுகிறது. அதிலும் இந்தியா சோதிடக் கலைக்குப் பெருமதிப்பு அளிக்கிறது. பாரதியார் புதிய ஆத்திசூடியில் சோதிடம் தனை இகழ் என்று கூறுகிறார். இதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்.

எல்லோரும் தொன்மைக்கும் மரபுக்கும் பெரிதும் அஞ்சுகிறார்கள். தொன்மையில் இருந்து விலகுவதற்கும் மரபிலிருந்து விலகுவதற்கும் அஞ்சுகிறார்கள். ஆனால் பாரதியாரோ *தொன்மைக்கு அஞ்சேல்* என்கிறார்.

ஆத்திசூடியில் இவ்வாறு பாடிய பாரதியார் புதுமைப்பெண் என்ற பாடலில் *"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"* என்று பாடுகின்றார். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நாற்குணமும் பெண்களுக்குப் பாதுகாப்பு என்று நம்பும் பாரதத்தில் *"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"* என்று பாட எவ்வளவு துணிச்சல் வேண்டும்? துணிச்சலாகக் கருத்தைக் கூறும் பாரதிக்கு உள்ளத்தில் உள்ளதே வார்த்தையில் வரும்.

## மாநிலம் பயன்பெறும் உயர்ந்த வாழ்வு

சில வேடிக்கை மனிதர்களைப் போல தேடிச் சோறு தின்று, சிறு கதைகள் பேசி, மனம்வாடி, பிறர் வாடும் செயல்கள் செய்து முதுமை எய்தி இறக்கும் வாழ்வை பாரதியார் விரும்பவில்லை.

*தேடிச்சோறுநிதம் தின்று -பல*
*சின்னஞ்சிறு கதைகள் பேசி-*
*மனம்*
*வாடித்துன்பமிக உழன்று - பிறர்*
*வாடப்பல செயல்கள் செய்து*
*- நரை*
*கூடிக் கிழப்பருவம் எய்தி -*
*கொடுங்*
*கூற்றுக்கிரையெனப் பின்மாயும்*
*- பல*
*வேடிக்கை மனிதரைப் போலே*
*-நான்*
*வீழ்வேனென்று நினைத்தாயோ?*


என்று கேட்கிறார். தாம் எவ்வாறான வாழ்வை விரும்புகிறார் என்பதையும் அவரே கூறுகிறார். தாம் இந்த மாநிலம் பயனடைய வாழ வேண்டும் என்கிறார்.

*"வல்லமை தாராயோ - இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே"*

எனச் சக்தியிடம் வேண்டுகிறார்.

இவ்வாறு சக்தியிடம் வேண்டியவாறே மாநிலம் பயன்பெற வாழ்ந்தார். தமிழ்க்கவியாகப் பிறந்து உலகக் கவியானார்.

---



# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் துணிச்சல் சிங்களத் தலைவர்களில் சந்திரிகாவுக்கே உண்டு

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் வரதர் அணி தெரிவிக்கின்றது

இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய துணிவும், திராணியும் சிங்களத் தலைவர்களில் சந்திரிகாவுக்கு மட்டுமே உள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் வரதர் அணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தேர்தலையொட்டி அது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்களே நீங்கள் படும் வேதனைகள், துன்பங்கள் , பேரவலங்கள் எமக்குப் புரியாதவையல்ல. நீங்கள் அனுபவிக்கும் நாளாந்த நரக வேதனை, உங்கள் மனங்களில் சமாதானத்துக்கும், அமைதிக்கும், கௌரவமான தீர்வுக்கு மான பேரார்வம் எங்களுக்குப் புரிகின்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் வாழ்வின் விடிவுக்காகவும், சமாதானத்திற்காகவும் நாம் அர்ப்பண உணர்வுகளுடன் செயற்பட்டிருக்கின்றோம் என்பதை உறுதியுடன் கூற முடியும். அதற்காகத்தான் நாம் தொடர்ந்து செயற்பட திட உறுதி கொண்டுள்ளோம்.

பேரினவாத ஒடுக்கு முறையிலிருந்து தமிழ் தேசத்தின் விடிவுக்காகவும், ஏற்றத் தாழ்வற்ற சமூகத்தை உருவாக்குதல் என்ற அழகிய கனவுடன் தான் நாம் போராடப் புறப்பட்டோம். துரதிஷ்ட வசமாக அந்தக் கனவு எம்மீது திணிக்கப்பட்ட ஜனநாயக மறுப்பினால் சிதறடிக்கப்பட்டது. ஆனால் எமது மக்களுக்கு நிம்மதியான சுயமரியாதையுடன் கூடிய வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற எங்கள் உணர்வில் எள்ளளவும் குறைவு ஏற்படட்டதில்லை.

நாம் போராடப் புறப்பட்ட நாள்களில் இருந்த பிரச்சினைகளை விட இன்று புதிதாக பல்லாயிரம் பிரச்சினைகள்.

நீங்கள்எத்தனை பேர் சொந்த மகனை,மகளை,தாயை,தந்தையை, மனைவியை, கணவனை,உற்ற சுற்றத்தை இழந்துள்ளீர்கள். எத்தனை பேர் நெற்றி வியர்வை சிந்தி இரத்தத்தைப் பிழிந்து உழைத்த சொத்துக்களை, இருப்பிடங்களை இழந்துள்ளீர்கள்.

எத்தனை கீர்த்திகளுடன் வாழ்ந்தவர்கள் நீங்கள் அறிவுச் செல்வமும், கலாசாரமும் ஆன்மீகமும் தழைத்தோங்கிய சமூகமல்லவா! ஏதோ ஒன்றைப்பறி கொடுத்தவர்கள் போல் எங்கே ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்! நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கியா?

நாம் அழிந்து விடமாட்டோம் எமக்கு ஒரு பலமான அடித்தளம் கொண்ட வரலாறு உண்டு. எமக்கு வேர்கள் உண்டு. ஆனால் இந்த வேர்கள் பிடுங்கி எறியப்படாமல் நாம் எம்மை தக்க வைக்க வேண்டும்.

நீங்கள் வெளியுலகத்திலிருந்து தொடர்பற்ற நிலையில் வாழ முடியாது. நவீன உலகின் அத்தனை புதிய தரிசனங்களும் உங்களுக்கு கிட்ட வேண்டும். கடும் உழைப்பும், திடமான சிந்தையும் உள்ளவர்கள் நாம். நிச்சயமாக நவீன உலகின் அத்தனை படைப்புக்களையும் பெற்றுக் கொண்டு சுபீட்சமான சமூகமாக நாம் வாழும் நாள் வெகு தூரத்தில் இல்லை. நாம் தலை நிமிர்ந்து அச்சமின்றி வாழும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

அத்தகையதொரு நாள் தானாக வராது. அதற்குநாம் முயல வேண்டும்.

### தீர்வு யோசனை

பொ.ஐ.மு. அரசினால் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அது தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூரணமாக உள்ளடக்கியதாக இல்லை. இருப்பினும் அதனை இனப்பிரச்சினை தீர்வுக் கான அடிப்படையாகக் கொள்ளலாம் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

எந்த ஒரு தீர்வும் இலட்சியபூர்வமானதாக முழு நிறைவானதாக இருப்பதில்லை. அதற்கென்று ஆரம்பம் ஒன்றிருக்கும். சந்திரிகா அவர்களின் தீர்வுயோசனைகளில்

✪ வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பிரதேசத் தொடர்ச்சி உறுதிப்படுத்தப்படவில்லை.

✪ நில அதிகாரம் சில குறைபாடுகளைக் கொண்டது.

✪ வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் - சிங்கள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மாத்திரம் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறைபாடுகள் பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் மூலம் நிவர்த்திக்கப்படக் கூடியவை ஒருமித்து முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

மற்றபடி இத்தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான அடிப்படையே

(10ஆம் பக்கம் பார்க்க)

குற்றச்சாட்டுகளுக்கு பிரதமர் ரத்னசிறி பதில் அளிக்கிறார்

# யுத்த விமானங்களைத் தருவித்தது புலிகள் மீது குண்டுகளை வீசவே!

## பூமாரி பொழிவதற்கு அல்ல!!

யுத்த விமானங்கள் தருவிக்கப் பட்டது புலிகள் மீது குண்டுகளை வீசுவதற்கே ஒழிய அவர்கள் மீது மல்லிகைப் பூக்களைத் தூவுவதற்கு அல்ல.

மேற்கண்டவாறு பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்க கூறினார். யாழ்ப்பாணத்தில்நடைபெறும குண்டு வீச்சுக்கள் குறித்து தெரிவிக்கப்படும் கண்டனங்களுக்கு பதில் அளிக்கும் விதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசுகை யில் கூறியதாவது:-

நாம் பல கோடி ரூபாக்கள் பணத்துக்கு இராணுவத் தளபாடங் களைக் கொள்வனவு செய்துள் ளோம். மேலும் யுத்த த்ளபாடங் களை கொள்வனவு செய்வதற்கும், யுத்த விமானங்களை தருவிப்பதற் கும்நடவடிக்கைகள் மேற்கொண்டுள் ளோம். யுத்தத்தை யுத்தமாகவே நடத்திக் கொண்டிருக்கிறோம். தேர் தல் தினத்தில் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள பகுதிகள் யாவும் மீளக் கைப்பற்றப்பட்டு விடும்.

ரணில் விக்கிரமசிங்க புலிக ளையோ பிரபாகரனையோ விமர்சிப் பதில்லை. அவர் புலிகளுக்கு எதிரா னவரா? இல்லையா? என்பதை மக்க ளுக்கு கூற வேண்டும்.

இப்படிப் பிரதமர் கூறினார்.

கொழும்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரண்டாவது இடத்தில் இருப்பதால் இரண்டாம் தர நபர்களுடன் விவா தம் நடத்தத் தான் தயாரில்லை என் றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைப் பகிரங்க விவா தத்துக்கு வருமாறு ரணில் சவால் விடுத்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை வழி நடத்திச் செல்ல மாட்டார் எனவும் ஆகவே நான் அவ ருடன் விவாதம் நடத்தத் தயார் என வும் அவருக்கு அறிவித்தோம்.

ஜனாதிபதியுடனேயே தான் விவா தம் நடத்துவாரெனவும், அந்தத் தகு திக்குக் குறைவானவர்களிடம் தாம்



விவாதம் நடத்தமாட்டாரெனவும் ரணில் கூறுகிறார்.

ஆனால், வேட்பாளர் பட்டியலில் ரணிலின் பெயர் 2ஆவது இடத்தில் இருப்பது எனக்குத் தெரியவந்துள் ளது. அரசில் 2ஆவது இடத்தில் இருப்பவர்களிடம்விவாதிப்பதை நிரா கரிக்கும் ரணிலுக்கு நான் அளிக் கும் பதில் யாதெனில் பட்டியலில் 2ஆவதாக இருக்கும் ரணில் போன்ற இரண்டாம் தர நபர்களுடன் நான் விவாதிக்கமாட்டேன் என்பதாகும் -

இப்படிப் பிரதமர் கூறினார்.(இ-4)

# தேர்தல் ஆணையாளர் மீது விசாரணையா? ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கண்டனம்

கொழும்பு,செப்.21

வாக்காளர் அட்டையில் ஒட்டுவ தற்கான "ஸ்ரிக்கர்களை" தனியார் அச்சகம் ஒன்றில் அச்சிட்ட விவகா ரம் குறித்து தேர்தல் ஆணையா ளர் தயானந்த திஸநாயக்காவை மனித உரிமைகள் ஆணைக் குழு விசாரணை செய்யும் என அறி விக் கப்பட்டிருப்பதை ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாரட்ண வன்மையாகக் கண்டித் துள்ளார்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழு வின் உறுப்பினராகவுள்ள திருமதி மனோகரி முத்தெட்டுவேகம பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசி யப் பட்டியலில் ஒருவராக இடம்பெற் றுள்ளார்.

இந்த நிலையில் தேசியப் பட்டி யலில் இடம்பெற்றுள்ள ஒருவர் எவ் வாறு தேர்தல் ஆணையாளரை விசா ரிக்க முடியும்.

நீதியான தேர்தலை நடத்த



தயானந்த திஸநாயக்கா

வேண்டுமென தேர்தல் ஆணையா ளர் முயற்சிக்கையில் அவருக்கெ திராகச் செயற்படுவது தவறாகும். எனவே அதனை அனுமதிக்க முடி யாது.

இப்படி ரவி கருணாரட்ண தெரி வித்துள்ளார். (இ-7-186)

# யாழ். தேர்தல் மாவட்டத்தில் 6,22,331 வாக்காளர்கள்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத் தில் உள்ள 11 தேர்தல் தொகுதிக ளில் இருந்தும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க மொத்தம் 6 லட்சத்து 22 ஆயிரத்து 331 வாக் காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என்று யாழ். தேர்தல் திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தொகுதி ரீதியாக வாக்காளர்க ளின் எண்ணிக்கை வருமாறு:-

- ஊர்காவற்றுறை - 51ஆயிரத்து 7
- வட்டுக்கோட்டை - 59ஆயிரத்து 419
- காங்கேசன்துறை - 63 ஆயிரம்
- மானிப்பாய் - 62ஆயிரத்து 692
- கோப்பாய் - 59ஆயிரத்து 419
- உடுப்பிட்டி - 53ஆயிரத்து 668
- பருத்தித்துறை - 42ஆயிரத்து 781
- சாவகச்சேரி - 53ஆயிரத்து 933
- நல்லூர் - 65ஆயிரத்து 203
- யாழ்ப்பாணம் - 53ஆயிரத்து 666
- கிளிநொச்சி - 57 ஆயிரத்து 543

(இ-9-ரி)

# கதிர்காமர் தமிழர்களை வெளிநாடுகளில் விற்கிறார்

## கூட்டணி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.21

இலங்கையில் உள்ள ஒரே யொரு தமிழ் அமைச்சர் கதிர்காமர், இவர் தமிழர்களை வெளிநாடுகளில் விற்கிறார்.



பொன்.செல்வராசா


இப்படி தமிழர் விடுதலைக் கூட் டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா குற்றஞ்சாட்டி னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வவுனியா முகாம்களில் தமிழ் மக்கள் "சீலை" மறைவில் வாழ்க்கை நடத்துகிறார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழர் குண்டு வீசிக் கொல்லப்படுகி றார்கள். எமது சகோதரர்கள் அங்கு தினம் தினம் மடிந்து கொண்டிருக்கி றார்கள்.

இந்த கதிர்காமரோ இலங்கை யில் தமிழர்கள் இன்னலின்றி வாழ் கிறார்கள். விடுதலைப் புலிகள் தான் பிரச்சினையைப் பெரிதுபடுத்துகிறார் கள் என நாடு நாடாகப் பிரசாரம் செய்து வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் கொடூர யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அரசின் பிரதிநிதிகள் வாக்குக் கேட்டு வருகின்றனர். அவர்களுக்கு நாம் வாக்களிக்க முடியுமா, தமி ழினத்தை விற்கும் அவர்களை விரட் டியடிக்க வேண்டாமா? அண்மையில் தமிழர் ஒருவர் 11 நாள்களுக்கு மட்டுமே எம்.பி. ஆக்கப்பட்டுள்ளார். அரசு நினைத்திருந்தால் அவரை முன்னரே எம்.பி. ஆக்கியிருக்கலாம். ஆனால் அரசமைப்புக்கு ஆதரவாக கையுயர்த்த வேண்டும் என்பதற் காக அவசரஅவசரமாக அவர் எம்.பி. ஆக்கப்பட்டார். தனது வாழ் நாளில் 11நாள்கள் எம்.பியாக இருந்து நாங் கள் காலங்காலமாக எதிர்த்து வந்த அவசரகால சட்டத்துக்கு ஆதர வாக கையுயர்த்தி தமிழ் மக்களுக் குத் துரோகம் செய்ததே அவரின் சேவை ஆகும்.




எமது கட்சிப் பிரதிநிதிகள் ஐவர் நாடாளுமன்றத்தில் இருந்தமையால் தான் அரசின் புதிய அரசமைப்பைத் தோற்கடிக்க முடிந்தது. நாம் மட்டும் ஆதரவு வழங்கியிருந்தால் அரசு அரசமைப்புச் சட்டநகலை நிறை வேற்றியிருக்கும். ஆதரவு தெரிவித் திருந்தால் போராடிக் கொண்டிருக் கும் இளைஞர்களின் நிலை என்ன? இந்த அரசமைப்பை புலிகள் மட்



டுமே எதிர்க்கின்றனர். எனவே அவர் களை ஓரங்கட்டுங்கள் என அயல் நாடுகள் சொல்லும் நிலை ஏற்பட்டி ருக்கும்.

பொதுமக்கள் ஐக்கிய முன் னணியானாலும், ஐக்கிய தேசியக் கட்சியானாலும் இரண்டும் பேரினவா தக் கட்சிகளே.

பேரினவாதக் கட்சிகள் இரண் டும் மாறிமாறி தமிழர்களுக்கு அநி யாயம் செய்து வருகின்றன. இத்த கைய அநியாயம் செய்யும் கட்சி களை ஆதரிக்க முடியுமா? தமிழி னத்தை விற்கும், விற்கப் போகும் அமைச்சர்கள் வாக்குக் கேட்டால் வாக்களிக்க முடியுமா? என்பதைச் சிந்தித்து யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தெளிய வேண்டும். தெளிந்த முடிவு தமிழர் விடுதலைக் கூட்டணியாகவே இருக்க முடியும்.

இப்படி அவர் கூறினார்.(இ-4-ரி)

### மகாசங்கத்துக்கு அறிவுறுத்து

பௌத்த மாகாசங்கத்தினர்கள் வாக்குச் சாவடிகளில் தேர்தல் கண் காணிப்பு நடவடிக்கைகளில் ஈடு படுவது பொருத்தமற்ற செயலாகும். இவர்கள் கட்சி சார்பற்ற முறையில் செயற்படவேண்டும்.

இவ்வாறு பேராதனையில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய விவசாய, காணி அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

பிக்குமார்கள் பக்கச்சார்பற்ற முறையிலும் பேதமற்றமுறையிலும் இருத்தல் அவசியம். கத்தோலிக்க குருமார் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிள வுபட்டுச் செயற்படுவதில்லை என் றும் அவர் கூறினார். (இ-ரி)

# வடக்கு முஸ்லிம்களின் அமைப்பின் புதிய அலுவலகம் திறந்துவைப்பு

கொழும்பு,செப்.21

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டி யிடும் வடக்கு முஸ்லிம்களின் உரி மைக்கான அமைப்பு (சுயேச்சைக் குழு) தனது அலுவலகம் ஒன்றை இடம் பெயர்ந்த யாழ்ப்பாணம் மற் றும் கிளிநொச்சி முஸ்லிம்கள் வசிக் கும் ரத்மல்யாய என்னும் இடத்தில் ஆரம்பித்துள்ளது.

மேற்படி சுயேச்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் மௌலவி ஏ. எஸ் சுபியான் இந்த அலுவலகத் தைத் திறந்து வைத்தார்.

திறப்பு விழாவில் உரையாற்றிய சுபியான் கூறியதாவது:-

தேர்தல் அலுவலகங்கள் எமது வெற்றிவாய்ப்புக்களை மென்மேலும் அதிகரிக்க வேண்டுமே தவிர பகை மையை வளர்ப்பதற்கு துணையாக அமையுமானால் அந்த அலுவலகங் களை மூடுவதே சிறந்தது.

அரசியல்வாதிகள் வழமைபோல் வாக்குறுதிகளை அள்ளி இறைக்க ஆரம்பித்து விட்டனர். ஆனால் அரசி யலில் பலமற்ற நிலையிலேயே நாம் பல சேவைகளைப் புரிந்துள்ளோம் - என்றார். (இ-7)

# ஐ.தே.கட்சி, பொ.ஐ.மு வுக்கு எதிர்காலத் திட்டமே இல்லை

## ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு,செப்.21

பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியும் ஐ.தே.கட்சியும் எந்தவித எதிர்கால அபிவிருத்தித் திட்டங்க ளும் இல்லாத நிலையில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் போட்டியி டுகின்றன.

இவ்வாறு மகரகமவில் நடை பெற்ற மக்கள் விடுதலை முன்னணி யின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அந்தக் கட்சியின் பிரசாரத் தலைவர் விமல் வீரவங்ஸ தெரிவித் தார்.

அவர் மேலும் பேசுகையில் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங் கள் நீண்ட கால அடிப்படையில் பலன் தரமாட்டா. ஜனாதிபதித் தேர் தலின் போது, "மக்களுடனான எனது ஒப்பந்தம்" என்ற தலைப் பிலும், எதிர்வரும் பொதுத் தேர்த லில் "உங்களின் எதிர்காலம்" என்ற தலைப்பிலும் ரணில் விக்கிரமசிங் கவினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள் பலனற்ற எதிர் காலத் திட்டங்களுக்குச் சான்று - என்றார். (இ-8)

# வாக்களிப்பு நிலையங்களில் தேசிய அடையாள அட்டை

## கட்டாயப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு,செப்.21

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க வரும்போது வாக்களிப்பு நிலையங்களில் தேசிய அடையாள அட்டை கொண்டுவருவது கட்டாய மாக்கப்பட்டால் ஆள்மாறாட்டம் செய்வது தடுக்கப்படலாம்.

மேற்கண்டவாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜே.ஈ. அந்தோனிப்பிள்ளை தேர்தல ஆணை யாளருக்கு அனுப்பியுள்ள கடிதத் தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவிக்கை யில்:-

அரசாங்க திணைக்களம், வங்கி அல்லது எந்தவொரு முக்கிய ஸ்தா பனத்துக்குள்ளும தேசிய அடை யாள அட்டை இல்லாமல் எந்த இலங்கை பிரஜையும் செல்ல முடி யாது.

ஏனைய உலக நாடுகளைப் போல் அன்றி இலங்கையில் குறிப் பிட்ட தோட்டத் தொழிலாளர் வர்க் கம் தவிர்ந்த ஏனையோருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள் ளது.

எனவே வாக்களிப்பு நிலையங் களுக்கு தேசிய அடையாள அட் டைகளைக் கொண்டுவரப் பண்ணுவ தன் மூலம் ஆள்மாறாட்டத்தையும் தேர்தல் மோசடிகளையும் தவிர்த் துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் தேர்தல் மோச டிகள் இடம்பெறக்கூடாது என்பதில் தேர்தல் ஆணையாளரும் அரசாங்க மும் ஆர்வம் கொண்டிருந்தால் இந்த நடவடிக்கையை நடைமுறைப்ப டுத்த இன்றும் கூட காலம் கடந்து விடவில்லை.

இப்படி அவர் தெரிவித்துள்ளார். (இ-8)

### ஐ.தே.க. மீது குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.21

1994ஆம ஆண்டு நடந்த பொதுத் தேர்தல் வன்முறைகளோடு ஒப் பிட்டு எதிர்வரும் பொதுத் தேர்தலை வரலாற்றிலே அதிக வன்முறைகள் இடம்பெற்ற தேர்தலாக சித்திரிப்ப தற்கு ஐ.தே.க. முயற்சி செய்கிறது.

மேற்கண்டவாறு பொது மக்கள் ஐக்கிய முன்னணி குற்றஞ் சுமத்தி யுள்ளது.

தேர்தல் கண்காணிப்பாளர்களு டன் சேர்ந்து தேர்தல் வன்முறை களை மிகப்படுத்திக் கூறுவதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவ ளிக்கும் ஊடக நிறுவனங்கள் பெரு மளவில் செயற்படுகின்றன என்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தெரிவிக்கின்றது.

(இ-ரி)



சத்யசாயி பாபாவால் பிரகடனப்படுத்தப்பட்ட இரத்ததான தினத்தை ஒட்டி கடந்த 17 ஆம் திகதி திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது இரத்தம் வழங்க வந்த ஒருவரிடம் இருந்து இரத்தம் பெறப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

வடபிராந்திய சத்ய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழு வின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (ஐ)


1st IN Com.

G.A.Q. யாழ். பேராதனை

- மேற்குறிப்பிடப்பட்ட பாட நெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகங்களால் கோரப்பட்டுள்ளன.
- A/Lஇல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- இதற்குரிய பதிவுகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

*விவரங்களுக்கு:*
S. அருள்நங்கை (78594)



புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின

திருநாள் (24.09.2000)

யாழ். போதனா வைத்தியசாலை

புரட்டாதி 21 ஆம், 22 ஆம் தினங்களில் வழிபாடுகள்
மாலை 4.25 (பு.நே) மணிக்கும்
23 ஆம் திகதி குணமாக்கல் வழிபாடு
மாலை 4.25 மணிக்கும்
24 ஆம் திகதி திருநாள் திருப்பலி
காலை 7.15 மணிக்கும் இடம்பெறும்.
*அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.*

(78526) - ஆன்மகுரு



**JAFFNA COLLEGE**
**INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI

British Computer Society Classes
for *April 2001* Exams.
Commence on 25th September 2000.
Please register by 22nd September.

Director
**Jaffna College Institute of Technology**
Vaddukoddai.

(C/12985)



JAFFNA COLLEGE

**ADMISSION - 2001**

1. Application for admission are invited to Grade 1 and Grade 6.
2. Students who seek admission to Grade 1 should be born between 1995 February 1st and 1996 January 31st.
3. Students for admission to Grade 6 should be born between 1990 February 1st and 1991 January 31st.
4. Students will be selected on the performance at the interview or written exam.
5. Application Forms should be collected at Jaffna College Office during the working hours on payment of Rs. 100/-
6. Few Boarding Scholarships are available to students with excellent academic performance.

*Closing date of Application: 31-10-2000*

**Principal**
JAFFNA COLLEGE

(C/12987)


## வாஜ்பாய் இரங்கல் செய்தி

கொழும்பு,செப்.21

அமைச்சர் அஷ்ரப்பின் அகால மரணம் தனக்கு பெரும் கவலையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தனது அனுதாபச் செய்தியை ஜனாதிபதி சந்திரிகா மூலம் அமைச்சர் அஷ்ரப்பின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கை தலைசிறந்த ஓர் அரசியல் தலைவரையும், ஆற்றல் மிக்க நிர்வாகியையும் இழந்துள்ளது. இந்தியா ஒரு பெறுமதிமிக்க நண்பனை இழந்துவிட்டது. அமைச்சர் அஷ்ரப்பின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எனது அரசாங்கத்தின் அனுதாபங்களையும் தனிப்பட்ட முறையிலான எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று வாஜ்பாய் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மாதாந்த உதவிப்பணம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மற்றுமொரு சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பலியானதாக கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கரும் பச்சை நிற சீருடையுடன் காணப்படும் இந்த சடலத்துடன் ஆ-824 என்ற இலக்கத் தகடும் காணப்படுகிறது.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு இந்தச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## பொலீஸ் அதிகாரி கைது

கொழும்பு,செப்.21

மோட்டார் சைக்கிள் திருட்டுத் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை விடுவிப்பதற்கு 40 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தில் தங்காலை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகள் மேற்படி இன்ஸ்பெக்டர் மீதான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-186)

## உயிரிழந்த நால்வர் விவரம்

வவுனியா,செப்.21

கடந்த 17ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் உயிரிழந்தவர்களில் நால்வரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

★புலியூரான் அல்லது புலிமைந்தன் (ராகவன் கஜேந்திரன்-யாழ்ப்பாணம்).

★செங்கொடி (வேலாயுதபிள்ளை கேசவன் - முல்லைத்தீவு).

★அன்பழகன (கோபால் சுதாகரன் - கிளிநொச்சி).

★சிறப்பு எல்லைப்படை உறுப்பினர் வசீகரன் (பாலன் வசீகரன - யாழ்ப்பாணம )ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (இ-8)

## அச்சுவேலியில் மக்கள் வங்கி கருமபீடம்

அச்சுவேலியில் மக்கள் வங்கியின் கருமபீடம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியின் சகல செயற்பாடுகளும் இந்த கருமபீடத்தில் இடம்பெறும் என்றும் இதனை அச்சுவேலிப் பகுதி மக்களும் வர்த்தகர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் முகமாக இந்த கருமபீடம் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை செயற்படும் என்றும் வங்கி முகாமையாளர் மு. சிவநேசன் தெரிவித்துள்ளார்.(இ-ரி)


ஆண்டு மிலேனியத்தில்
அகவை ஒன்று

HAPPY BIRTHDAY



செல்வன் சு. கஜித்

வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த
சுதர்சன் - யசோதா தம்பதியினரின்
செல்வப்புதல்வன்

செல்வன் கஜித்

தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் நாளை (22.09.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வெகு விமர்சையாக கொண்டாட இருக்கின்றார். கஜித் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம். கஜித்தின் பிறந்தநாள் விழாவில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
சுதர்சன் தம்பதிகள்
(தர்சன்)

*இல. 26, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

(78572)



யா/கந்தரோடை
தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
பழைய மாணவர் சங்கம்
16-09-2000 திகதி நடைபெற்று முடிந்த
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு - 10543
2ஆம் பரிசு - 10347
3ஆம் பரிசு - 671

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1213 | 900 | 10074 | 1861 |
| 933 | 845 | 664 | 9324 |
| 10572 | 7456 | | |

பரிசுக்குரியவர்கள் 16-10-2000 க்கு முன்பாக மேற்படி பாடசாலையில் வந்து பரிசினைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆ.சி.கணேசவேல்
செயலாளர்

(C/13005)



* பல் கட்டவேண்டுமா?
* கிளிப் போடவேண்டுமா?

சிறந்தமுறையில் பல்கட்டுதல், கிளிப்போடுதல் ஆகியவை செய்து கொடுக்கப்படுவதுடன், உங்கள் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளை வழங்குபவர்கள் உங்கள் தேவைக்காய் என்றென்றும் சேவையாற்றும்

எரிக்கணேஷ்

*T.P* - 2486
*FAX* - 2486

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:- 91, K.K.S. Road,
*கொக்குவில்.*

(C/13005)



யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய
பழைய மாணவர் சங்க
வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: வித்தியாலய மண்டபம்
காலம்: 23-09-2000 சனிக்கிழமை மு.ப 9.30 மணி

அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. கெங்காமலர்தேவி
தலைவர்

செல்வி ச. அம்பிகைபாகன்
செயலாளர்

(78596)

# கண்ணீர் அஞ்சலி

எமது இனிய நண்பரும் அயலவரும்
சமூகசேவையாளருமாகிய

## அமரர் A. A. யோகராசா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும்
U. N. D. P. உத்தியோகத்தரும்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

றெரகான் சஞ்சேய் ராஜா (J.P.)
குடும்பம்,
திருமதி M. J. ஆசீர்வாதம்
பப்பா குணம் குடும்பம்.

41, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம். (78631)

# மரண அறிவித்தல்கள்

தெல்லிப்பழை

## வேலன் பசுபதி

(மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர், மயிலிட்டி)

மாவிட்டபுரம் பட்டிக்கடவையைப் பிறப்பிடமாகவும் உடுவில் றோட், 2ஆம் ஒழுங்கை, மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலன் பசுபதி நேற்று (20-09-2000) புதன்கிழமை காலமானார்.

இவர் தவமணியின் அன்புக் கணவரும், சிவா, பவுண் (ஆஸ்திரேலியா), நிதியன், ராணி, சோதி ஆகியோரின் தகப்பனாரும் இராசரட்ணம், செல்வராசா, மலர்விழி, தில்லைநடராசா, செல்வரட்ணராசா, நவரட்ணராசா, வேலையா, தங்கராசா, தங்கமணி ஆகியோரின் மாமனாரும் வாசுகி, ஜீவகி, பரதன், பிரணவன், பிரவீனன், கஸ்தூரி, டெபினியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-09-2000) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
P. சிவா
(மகன்)

2 ஆம் ஒழுங்கை,
உடுவில் றோட், மானிப்பாய். (78632)

## ஆறுமுகம் விவேகானந்தன் (மாமா)

(உரிமையாளர்-விவேகா இன்டஸ்ரீஸ், விவேகா பார்மசி, ரீ-கோணர் (கல்வியங்காடு)

திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் விவேகானந்தன் நேற்று (20-09-2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம், பூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், நிசானி, வாரணி, மாதங்கா (மாணவிகள்-யாழ். இந்து மகளிர் கல்லூரி), சனுஜா, தசாங்கினி, (திருநெல்வேலி கிழக்கு-றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவிகள்), சிவறஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துச்சாமி, திருமதி முத்துக்குமாரு (லண்டன்), திருமதி புவனேந்திரன் (மாநகரசபை நூலகம்-நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துக்குமாரு (லண்டன்), திருமதி சிவபாக்கியம், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-09-2000 (இன்று) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆடியபாத வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் திருநெல்வேலி இந்து மயானத்தில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சோ. புவனேந்திரன்

ஆடியபாத வீதி,
நல்லூர். (78597)

## சிவசம்பு தவராசா (ராசன்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு தவராசா 19-09-2000 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சிவசம்பு காலஞ்சென்ற இராசம்மாவின் அன்பு மகனும் இராசநாயகி (செல்வி) யின் அன்புக் கணவரும் சுஜீவனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு, அன்னபூரணம், சின்னத்தம்பி, செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கந்தையா, சிவசம்பு மற்றும் தங்கம்மா, மனோன்மணி, திருநாவுக்கரசு, நாகேஸ்வரி, நாகராசா, கமலாதேவி, மகேசன், றோகினி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் திருநாவுக்கரசு, றஞ்சினிதேவி, சாம்பசிவம், மீனாம்பாள் ஆகியோரின் அருமை மருமகனும் மூர்த்தி (ஜேர்மனி), பிரபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணநாதன் (கணா), மைதிலி, பிரியா, கண்ணதாசன், புனிதவதி (ஆசிரியை), ஜெயதாஸ் (சுவீடன்), புஷ்பவதி ஆகியோரின் அருமை மைத்துனரும் சேனாதிராசாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்தம்பி திருநாவுக்கரசு
(மாமன்)

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. (78620)

## உதைபந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலய சங்கானைக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு

★ சித்தன்கேணி கணேசா வித்தி எதிர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி

★ மூளாய் சைவப்பிரகாச வித்தி, எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி.

★ தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி. எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தி.

★ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி. எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.-

16 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் இ. க. எதிர் பண்டத்தரிப்பு ஜலிந்தா.

★ சண்டிலிப்பாய் இ. க. எதிர் மாதகல் சென். ஜோசப் கல்லூரி

18 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் இ. க. எதிர் இளவாலை புனித ஹென்றியரசர்.

தெல்லிப்பழைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

★ வயாவிளான் ம.ம.வி. எதிர் இளவாலை மெய்கண்டான் ம. வி.

18 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

★ இளவாலை மெய்கண்டான் ம.வி. எதிர் மல்லாகம் ம. வி. (ஐ-8-86)

## உயிரிழந்த மற்றும் சிலரின் விவரம்

மட்டக்களப்பு, செப். 21

சாவகச்சேரிப் பகுதியில் படையினரின் முன்னேற்ற நடவடிக்கையின்போது ஏற்பட்ட மோதலில் கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் உயிரிழந்த மேலும் சில புலி உறுப்பினர்களின் விவரம் வெளியிடப்பட்டன.

★ புலி ஊரான் அல்லது புலிமைந்தன் (இராகவன் கஜேந்திரன்—யாழ்ப்பாணம்)

★ பூங்கொடி (வேலாயுத பிள்ளை கேசவன் — உடையார்கட்டு)

★ அன்பழகன் (கோபால் சுதாகரன்—கிளிநொச்சி)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் வசீகரன் (பாலன் வசீகரன்—யாழ்ப்பாணம்)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் யோகன் (செபமாலை யோகாநந்தம்—இரணைதீவு

## பவள விழா

யாழ்ப்பாணம், செப். 21

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தின் பவள விழா அடுத்த மாதப் பிற்பகுதியில் நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவுக்கு தேவையான ஆலோசனைகளையும், நிதியுதவியினையும் எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ-ரி)

# நீங்கா நினைவில் பத்தாம் ஆண்டு



மலர்வு
19 — 12 — 1932

உதிர்வு
24 — 09 — 1990

திருமதி

## யேட்றூட் (றீற்றா) இம்மனுவல்

பத்து வருடங்கள் பறந்துவிட்டாலும்
பத்துமாதம் சுமந்த உன் பாசமுகம்
மறக்கமுடியுமோ? — என்றும் உன்
நினைவால் வாடி நிற்கிறோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (21-09-2000) வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு யாழ். பேராலயம், குருநகர் கார்மேல் அன்னை, ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயம், மாவிட்பாய் புனித அன்னம்மாள் ஆலயம் ஆகியவற்றில் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்

அன்புக் கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தகவல்:-
யோசப் இம்மனுவல்,
28, மவுண்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம். (சி/13017)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் மீனாட்சி

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த ஆறுமுகம் மீனாட்சி 20-09-2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகத்தின் (முன்னாள் கே. ரி. எஸ். லொறி உரிமையாளர்) அன்பு மனைவியும் Dr. கேதீஸ்வரன் (சுகாதார வைத்திய அதிகாரி — வவுனியா), சுப்பிரமணியம் (விரிவுரையாளர், முகாமைத்துவத் துறை — யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரி, சறோஜினி, கந்தசாமி (போதனாசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் — மருதனார்மடம்), வசந்தா (ஆசிரியை), இரத்தினசிங்கம் — தவமணி, சற்குருநாதன் — ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் உமாசசிரேகா, உமாகரன், வினோஜா, ஜனனி, ஜசீதன், ஜசிதா, திலக்ஷன், கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-9-2000) வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஆ. சுப்பிரமணியம்
(மகன்)

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (சி/13015)

## திருமதி நாகேஸ்வரி நாகலிங்கம்

(நாகலிங்கம் அன் சன்ஸ் உரிமையாளரின் பாரியார்)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்தவரும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திருமதி நாகேஸ்வரி நாகலிங்கம் நேற்று (20-09-2000) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (நாகலிங்கம் அன் சன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் குணபாலன் (இலங்கை வங்கி — வேலணை), சிவபாலன் (நாகலிங்கம் அன் சன்ஸ்), வசந்தகோகிலம் (கொழும்பு), வசந்தகுமாரி (கனடா), தேவபாலன் (நாகலிங்கம் அன் சன்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நித்தியகலா, சாந்தமலர், வசந்தன் (கொழும்பு), பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைஷ்ணவி, வத்ஸன், றதீஸ், மதனன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (20-09-2000) புதன்கிழமை 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. குணபாலன்
(இலங்கை வங்கி)

இல. 192/1, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (78615)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அராலி வடக்கு, வட்டுக் கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த அற்புதராணி கந்தையா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.6664103 27v) 12-09-2000 அன்று அராலி வடக்கிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78586)

தங்கராசா ஜெயந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.762194120v), உடுப்புகள் அடங்கிய கைப்பை 13-09-2000 அன்று செல்வச்சந்நிதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கோயில் ஒழுங்கை, நாவாந்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (78598)

நவாலி கிழக்கு, சின்னப்பா வீதி, என்னும் முகவரியைச் சேர்ந்த செல்லத்துரை நாகரத்தினம் என்பவரது தேசிய அ.அட்டை (551752801v), விசேட அ.அட்டை (0905010875), கடற்றொழில் அ.அட்டை இல. (507) இம் மூன்றும் நவாலிக்கும் ஆனைக் கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (78587)

## விற்பனைக்கு

100 பிளாஸ்டிக் கதிரைகள் (புதியவை), 150 மடிப்பு குசன் கதிரைகள் (வெளிநாட்டுத் தயாரிப்பு) மற்றும் வீட்டுப் பாவனைத் தளபாடங்கள், மின் உபகரணங்கள், PHI NER (பைனியர்), ஸ்ரீரியோ செற்-8 துண்டு, மின்பிறப்பாக்கி (சிறிராம்) SRIRAM HONDA-650 ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19/1A, ப.ஏ. தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொலை பேசி - 2453 (78565)

ISUZU (FARGO MODEL) VAN (AIR CONDITION) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: கிரேசர் உதயன், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (78589)

## பொய்யாமொழி ஜோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, பிரயாணத் தடை விலக ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன்தவறினால் பணம் திரும்பப்பெறலாம். சனி, செவ்வாய் (ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி), 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (78599)

## ஆசிரியர் தேவை

தரம் 9, 10, 11 இந்து தமிழ், கணிதம் கற்பிக்கக்கூடியவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை 21.09.2000 இற்கு முன் அனுப்பி வைக்கவும். தொடர்பு: A. ராகவன் (CASIO), 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (78501)

## O/L ENGLISH MODEL PAPER

மாணவர்களுக்கு நிச்சயம் உதவியாயிருக்கும், யாழ்ப்பாணம் பூபால சிங்கம், மானிப்பாய் நாயகபாலன் உட்பட எங்கும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 12/- ஆசிரியர் K.சோமசுந்தரம் சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (78300)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூரநட்சத்திரம், வயது 29, கிரகபாவம் - 49, லக்கினத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள, அரச தொழில் புரியும் அழகிய மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (உள்ளூர் வரன் விரும்பத்தக்கது). தொடர்பு கடிதம் மூலம் அல்லது நேரடியாக தினமும் 9.00 - 4.00 மணிவரை க.திருஞான சம்பந்தக் குருக்கள். ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி, நல்லூர். (78580)

## அறைகள் வாடகைக்கு

யாழ். நகரில் அறைகள் வாடகைக்கு உண்டு. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 12.00 மணியில் இருந்து 3.30 மணிவரை பார்வையிடலாம். (78531)

## A/L LOGIC

க.பொ.த (உ.த.) வகுப்பு மாணவர்களுக்கான அளவையியல் பாடம் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: K. Baba சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.(78608)

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.21

1996ஆம் ஆண்டு படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன கணேஸ் ரமேஸ், கதிரவேலுப்பிள்ளை கேதீஸ்வரன், பூபாலசிங்கம் ஜெயலலிதா, இராசையா சுதர்மன் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஆள்கொணர்வு மனு வழக்குத் தொடர்பாக பின்வருவோரை மனித கௌரவத்துக்காக மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் இணைப்பாளர் ஐ.சிவராசா கேட்டுள்ளார்.

நாவற்குளியைச் சேர்ந்த திருமதி இரா மாலினி, திருமதி பூபாலசிங்கம் சரஸ்வதி, கொழும்புத்துறை உப்புக்குளம் வீதியைச் சேர்ந்த திருமதி இ.சரோஜினிதேவி ஆகியோரே யாழ்.மணியம் கட்டடத்தில் உள்ள மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (இ-9)

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர்

கொழும்பு,செப்.21

இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக பேராசிரியர் சேனக பண்டார நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இலங்கைத் தூதுவராக இந்தியாவில் பணியாற்றிய மங்கள முனசிங்கவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டார். (இ-9-4)

## இனப்பிரச்சினை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

இந்தத் தீர்வு யோசனைகளை அமுல்படுத்துவதற்கு எதிராக பௌத்த மகா சங்கங்களும், ஐ.தே.கவும், ஜே.வி.பியும், சிஹல உறுமய போன்ற இனவாதக் குழுக்களும் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்ப்பைக் கட்டவிழ்த்து விட்டன.

என்ன சமாளிப்புக்களைச் சொன்னாலும் இந்த எதிர்ப்புக் கிளர்ச்சி தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கப் படக் கூடாது என்ற பச்சை இனவாதமே. அந்த வகையில் இவ்வளவு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இத் தீர்வு யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் மூலம் ஜனாதிபதி துணிச்சலாகவும், முற்போக்காகவும் நடந்து கொண்டார்.

எனவே எதிர்காலத்தில் இப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய துணிச்சலும், திராணியும் இன்றுள்ள தலைவர்களுள் ஒரே ஒரு சிங்களத் தலைவர் சந்திரிகா அவர்களுக்கே இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் நாம் தீர்வு யோசனைகளை ஆதரிக்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தொழில் நிறுவனம் ஒன்றுக்கு கம்பி ஆணி தயாரிக்கும் இயந்திர இயக்குநர் (Operator) தேவை.


*காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.*

**செல்வா ஹாட்வெயர்ஸ்**

**120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இல: T.P } 2873 (C/12986)

# விண்ணக வாழ்வின் பத்தாண்டு நினைவு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 - 06 - 1952 | 21 - 09 - 1990 |

அமரர்

**மரியநாயகம் அன்ரனி எட்வேட்**

(உதவிப் பொறியியலாளர் - காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை)

அன்பின் உருவாய், பண்பின் பதிவிடமாய் அமைதியின் உறைவிடமாய், புன்சிரிப்பு தவழும் முகத்துடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் இறைபதமடைந்து இன்றுடன் பத்தாண்டுகள் ஆகின்றது

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்

அன்பு மனைவி
மகன், தாய்,
உறவினர்.

*பொந்தி லேன்,*
*பண்டத்தரிப்பு.* (78574)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 02 - 1934 | 22 - 08 - 2000 |

அமரர் கா. மாணிக்கவாசகர்

(முன்னாள் அரச அதிபர்)

"காலத்தால் அழியாத காவிய நாயகனின் ஜனனமும் அஸ்தமனமும் வரலாற்றில் ஓர் ஏடு"

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

*70, குருசோ வீதி,*
*சுண்டுக்குளி.*

S. சிவராமலிங்கம்
குடும்பத்தினர் (78588)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1969 - 05 - 17 | 2000 - 08 - 22 |

அமரர் பாலசிங்கம் ரகுபதி


(சாரதி, வட பிராந்திய போக்குவரத்துச் சபை)

ஏற்றமொடு எழில் கொஞ்ச நின்ற
தென்மராட்சி பதியதனில்
உற்ற தொரு உலகம் போற்றிப்
புகழ் உதித்தனன்
நாற்றிசையும் நன்மக்கள் சேவை
தரும் போக்குவரத்துச் சபையாம்
கோண்டாவில்தனில்
போற்றும் வகையால் சேவை செய்து புகழ்சேர்க்க முன்னே
பரமன் தாள் சேர்ந்தனன் நம்மினிய பால ரகுபதியே!
ஓம் சாந்தி!

வட பிராந்திய போக்குவரத்துச் சபை
ஊழியர்கள்.

(78566)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 - 02 - 1934 | 22 - 08 - 2000 |

**கார்த்திகேசு மாணிக்கவாசகர்**

(ஓய்வு பெற்ற கிளிநொச்சி, யாழ். அரச அதிபர்)

எமது குடும்பத் தலைமகன் அமரர் திரு. கார்த்திகேசு மாணிக்கவாசகர் அவர்கள் 22-08-2000 ஆம் ஆண்டு கொழும்பில் சிவபதமடைந்த செய்தியறிந்து, கொழும்பில் நடைபெற்ற அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், இரங்கலுரை நிகழ்த்தியோருக்கும், அதேவேளை மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற துக்க நிகழ்வில் சமநேரத்தில் பங்குபற்றியோருக்கும், பத்திரிகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், மற்றும் மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசி, தொலைநகல், தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், நினைவுமலர் அச்சிடுவதற்கு வேண்டிய ஆக்கங்களைத் தந்துதவியோருக்கும் எமது நன்றியறிதல்களைத் தெரிவிப்பதுடன்-

இன்று (21-09-2000) வியாழக்கிழமை மானிப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்

*மடத்தடி லேன்,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.* (78553)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர்

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்

அன்பு மனைவி

## திருமதி தவஜோதி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**தலைவர்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
*அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.*

(C/13009)

---

## மேல் நீதிமன்றம் இயங்கும்

யாழ். மாவட்ட மேல் நீதிமன்றம் அடுத்த மாத நடுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளதாக யாழ். நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ். மேல் நீதிமன்றத்தினை மீண்டும் இயங்கச் செய்வதற்கான உத்தரவினை பிரதம நீதியரசர் விடுத்துள்ளதாகவும் -

இதற்கு வசதியான கட்டடம் ஒன்றைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக எற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா இது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

(ஐ-5)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினர்

## அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராசா

அவர்கள் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செயலாளர்,**
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*
*யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.*

(78616)

---

# இராசம்ஸ் தொலைத்தொடர்பகம்

1) 333, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி இல:*
*021 - 2401*
*021 - 2814*
*பக்ஸ்:*
*021 - 2401*
*021 - 3095*
*021 - 2997*

2) துணைவிச் சந்தி,
சங்கரத்தை.
*070 - 212454 - 070 - 212520*

3) கொடிகாமம் சந்தி,
கொடிகாமம்.
*070 - 212319 - 070 - 212296*

4) கந்தரோடை வீதி,
சுன்னாகம்.
*021 - 3568*
*021 - 3569*

**தாமதமின்றி உடனுக்குடன் உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு வசதிகள் இரவு, பகல் சேவையாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறியத்தருகின்றோம்.**

(78623)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும் நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவருமான

**திரு. பெ.கனகசபாபதி** அவர்களின்

அன்பு மனைவி

## திருமதி தவஜோதி

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

***சிவகாமசுந்தரி ச.ச.நிலையம்***

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

(78580)

---

# கண்ணீர் அஞ்சலி

மயிலிட்டி தெற்கு - குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த

அமரர் **வைத்திலிங்கம் சண்முகநாதன்**

அவர்கள் திருச்சியில் (இந்தியா) காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வீமன்காமம் தெற்கு,*
*தபாற்கந்தோர் வீதி,*
*தெல்லிப்பழை.*

பொன்.இராசரத்தினம் குடும்பம்.
(சம்பந்தி)

(78611)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் மூத்த உறுப்பினரும்
எமது மன்றத்தின் தற்போதைய அக்கிராசனருமாகிய

**திரு. பெ.கனகசபாபதி**

அவர்களின் அன்பு மனைவி

## திருமதி தவஜோதி

அவர்களின் மறைவைக்கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

**தலைவர், செயலாளர்,**
**மன்ற உறுப்பினர்கள்.**

*மறுமலர்ச்சி மன்றம்,*
*லோட்டன் வீதி, மானிப்பாய்.*

(78613)

---


# வேண்டாம் வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்

(C/13011)


---

# 6ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு
10
-
09
-
1936



உதிர்வு
21
-
03
-
2000

## திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய்
அனைவருக்கும் வாழ்வதனில் உபதுணையாய்
விளங்கிய எம் குல விளக்கே,
குடும்பத் தலைவியே!
அம்மாவே, மாமியே, அம்மம்மாவே,
கனிவுடனே பாராட்டிச் சீராட்டி
வளர்த்தெம்மைக் கலங்க விட்டு
ஏனம்மா சென்றீர்கள்?
யாரை இனி அம்மா என அழைப்போம்?
எம் அன்புத் தெய்வமே!
எமது உயிர் உள்ளவரை எம்மை விட்டு
அகலாது உங்கள் மதிமுகம்
எமது அன்புத் தாயே!

*கணவன்*
*பிள்ளைகள்,மருமக்கள்*
*பேரப்பிள்ளைகள்.*

*42, புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(C/13008)

# ஆஸ்பத்திரியில் சடலங்களை பேணுவதில் உள்ள நெருக்கடி

## அரச அதிபர் படைத்தரப்புடன் பேசுவார்

பெரும் எண்ணிக்கையான சடலங்களை யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்துப் பேணுவதில் உள்ள நெருக்கடி தொடர்பாக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் பலாலியில் படை உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்த உள்ளார்.

இன்று பலாலிக்குச் செல்லும் அரச அதிபர் யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுடன் இது குறித்துப் பேசுவார் என்று தெரியவருகிறது.

அண்மைக்காலமாக சண்டைகளில் உயிரிழப்போரின் சடலங்கள் - ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையில் - யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே பெரும் வசதியீனங்களுடன் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் அவற்றை வைத்துப்பேண முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆஸ்பத்திரி நிர்வாகம் ஏற்கனவே சம்மந்தப்பட்ட தரப்பினர்களிடம் இது குறித்து முறைப்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்.அரச அதிபரிடமும் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே அவர் இதுபற்றி படைஅதிகாரிகளுடன பேச இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இளம் குடும்பப் பெண் எய்ட்ஸினால் பீடிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டில் எய்ட்ஸ் நோயாளி என இனம்காணப்பட்ட ஒருவரது இளம் மனைவிக்கும் எச்.ஐ.வி. தொற்றி இருப்பது யாழ்.ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்கப் பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 20 வயதான இந்த இளம்பெண்ணின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்ட போது எச்.ஐ.வி. தொற்றியிருப்பது தெரிய வந்தது.

வெளிநாட்டில் இருந்து வந்த இவரது கணவர் இவரைத் திருமணம் முடித்து மூன்று மாதங்களின் பின்பு எய்ட்ஸ் நோயாளி என இனங்காணப்பட்டார். (ஐ)

## அம்புலன்ஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது.

அம்புலன்ஸ் தீப்பிடித்து எரிந்த போதும் சாரதியின் சாதுரியத்தால் தீ முற்றாகப் பரவுவது தவிர்க்கப்பட்டது.

இதனையடுத்து அதில் ஏற்றிவரப்பட்ட நோயாளிகள் அவசர அவசரமாக இறக்கப்பட்டு வேறு ஒரு வாகனத்தில் வவுனியா ஆஸ்பத்திரிக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தத் தீ விபத்துக்கு சதி நாச வேலை காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஐ-10)

## குருநகர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடற்பகுதியில் செவ்வாய்க்கிழமை விமானங்கள் தாழப் பறந்து தாக்குதலில் ஈடுபட்டிருந்ததை தொலைவில் இருந்து தாங்கள் கண்டதாகவும் மீனவர்கள் கூறியுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த றிச்சேட் றெனோல்ட் (வயது 27), இம்மானுவல் விஜயகுமார் (வயது 23), தேவசகாயம் யூட் கிளறின்ரன் (வயது24), ஸ்ரீபன் ஜோர்ஜ் ஜீவானந்தன் (வயது 23), மரியநாயகம் குணதாஸ் (வயது 23) ஆகிய ஐந்து மீனவர்களுமே இன்னமும் கரை திரும்பவில்லை.

இது குறித்து மீனவர்களின் உறவினர்கள் குருநகரில் உள்ள படையினரிடமும், செஞ்சிலுவைச் சர்வதேசக குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர். இதேவேளை -

நேற்றையதினம் தொழிலுக்குச் செல்ல மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ஐ-51-17-15)

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரிகள், நவீன சந்தை, பஸ் நிலையப் பகுதி அடங்கலாக அந்த நகரிலுள்ள சகல கட்டடங்களும் இடிந்தும், தரைமட்டமாகியும் காட்சியளிப்பதாகவும் -

திரும்பும் திசை எங்கும் கட்டட இடிபாடுகளையும் சிதறிக் கிடக்கும் கூரை ஓடுகள், 'சீற்று'களையும், ஷெல் சிதறல்களையுமே காணக் கூடியதாக இருப்பதாகவும் - பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

"டிறிபேர்க் கல்லூரியும் அதனை அண்டியுள்ள கட்டடங்களும் பெரும் அழிவுக்குள்ளாகியிருக்கின்றன. எங்கும் படையினரே காணப்படுகின்றனர். மனிதர்கள் வாழ முடியாத பிரதேசமாக நகரம் காட்சி தருகிறது" என்று அங்கு சென்று திரும்பிய தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளவந்து குடியேறுவதற்கு மிகப் பல வருடங்கள் செல்லும் என்பதனையே நான் கண்ட காட்சிகள் எடுத்துச் சொல்கின்றன என்று வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் மதிப்பிட்டார்.

கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி நகரைக் கைப்பற்றப் படையினர் ஆரம்பித்த பெரும் தாக்குதலின் போதும் பின்னர் புலிகள் நடத்திய பெரும் பதிலடித் தாக்குதலின் போதும் 3 ஆயிரம் சுற்றுக்களுக்கும் அதிகமான மோட்டார் ஷெல்கள் மற்றும் ஆட்டிலறி குண்டுகள் அந்த நகர மையத்தைத் தாக்கியதாகப் படைத்தரப்பில் கூறப்பட்டதாக வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் விவரித்தார்.சாவகச்சேரியை மீட்கும் நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் ஹினிகிர' என்று படையினர் பெயரிட்டிருந்தனர்.

சாவகச்சேரியை மீட்பதற்கான நடவடிக்கை மிக வேகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்று முடிந்ததாக யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட பல்குழல் பீரங்கிகள் இந்த நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சாவகச்சேரி நகரம் மீட்கப்பட்டிருப்பதன் மூலம் பலாலித் தளம் மீதான புலிகளின் அச்சுறுத்தல் நீங்கியுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் மேலும் தெரிவித்தார்.

இராணுவ ரீதியான நிலைப்பாட்டை மட்டும் கருத்திற்கொண்டே அரசாங்கப் படைகளின் நடவடிக்கை அமைந்ததாகவும், பொதுத் தேர்தல் காலம் அதனோடு பொருந்திவிட்டது. எனினும படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதால் விடுதலைப் புலிகளால் இனித் தேர்தலில் 'தலையிட முடியாது' - கொழும்புத்துறை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதால் யாழ்ப்பாண நகரத்துக்கு இருந்த 'அச்சுறுத்தல் இனிமேல் இருக்காது - என்றும் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேலும் சொன்னார். (ஐ-5-8-9-10)

**இன்றைய வீடியோ CD வெளியீடு**

பிரகாஷ்ராஜ், குஷ்பு

* சின்ன சின்ன கண்ணிலே

அப்பாஸ்

* கிளியோபட்றா

பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்

**மூர்த்தி வீடியோ**

மானிப்பாய். (C/13018)

## ஏழு புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்மாவதி - யாழ்ப்பாணம்) -

நேற்று முன்தினம் பளைப் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரவேங்கை சந்திரகுமார் (கோபால் கோபிநாத் - கிளிநொச்சி), மேஜர் முடியரசன் (நாகமணி யோகேஸ்வரன் - மட்டக்களப்பு) ஆகியோரும் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-10)

## படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றல் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உரிய இலக்கை அடையு முன்னரே - சடலங்கள் ஒப்படைக்க ஒழுங்கு செய்யப்பட்ட இடத்துக்குச் சமீபமாக - விழுந்து வெடித்ததே காரணம்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுப் பிற்பகல் வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வீழ்ந்து வெடித்தவேளை, அந்த இடத்தில் இராணுவத்தினரும் அதிகாரிகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளுடன் கூட நின்றனர்.

சடலங்களை ஒப்படைக்கும் பணியைத் தொடர முடியாது என்று செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் தெரிவித்ததால் அது கைவிடப்பட்டது - என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதி, இருதரப்புகளில் எவரும் சுட்டுக்கொள்ளாத இடமாக இனங்காணப்பட்டே சடலங்களை ஒப்படைக்க ஏற்பாடாகி இருந்தது. எனினும் விடுதலைப் புலிகள் சாவகச்சேரி முன்னணி அரண்கள் மீது சுட்டனர். அதனால் பாதுகாப்புப் படையினரும் திருப்பிச் சுட நேரிட்டது -

அவ்வேளை அச்சுவேலியிலிருந்தும் பலாலியிலிருந்தும் சம வேளையில் சாவகச்சேரி நோக்கி பல்குழல் பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டன - என்றும் அந்த அறிக்கையில் மேலும் காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.(அ)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

குடாநாட்டில் தினமும் கேட்கும் ஷெல் மற்றும் பீரங்கிச் சத்தங்கள் நேற்று முழு நாளும் ஓய்ந்திருந்தன. எந்தப் பகுதியிலும் பெரியளவில் மோதல சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் தகவல் இல்லை. (ஐ-5-8-10-15-173)

## கூட்டணியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட வேட்புமனுவில் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகத்தின் கையொப்பம் முறையாக அத்தாட்சிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்து அந்த மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடும் எஸ்.கோபாலகிருஸ்ணன் தாக்கல் செய்த மனுவின் மீதே நேற்று இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஒரு தேர்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - தேர்தல் பற்றிய முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர், தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியுமா? நீதிமன்ற உத்தரவு தேர்தல் ஆணையாளரைக் கட்டுப்படுத்துமா? நீதிமன்றத் தீர்ப்பைத் தேர்தல் ஆணையாளர் ஏற்பாரா? - என்பது குறித்து அடுத்துவரும் நாள்களில் தெரியவரும் என்று சட்ட வல்லுனர்கள் தெரிவித்தனர். (உ-8)


**வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!**



X

வீணையை மீட்டிட மக்களே எழுக!
விடியலை மீட்டும் பலத்தை மக்களே தருக!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்திற்கே!

(ஈ.பி.டி.பி.)

ஈ.பி.டி.பி எடுத்த முயற்சியை அடுத்து குடாநாட்டில் மின்சாரப் புனரமைப்புக்கு 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 45 கோடி ரூபாவிற்குரிய வேலைத்திட்டங்கள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளன.



**தவறிவிட்டது**

கைச்சங்கிலி (பவுண்) கோண்டாவில் கஜலட்சுமி ஜுவலறிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:

**கஜலட்சுமி ஜுவலறி**

470, கே.கே.எஸ். றோட், கோண்டாவில். (78610)



**உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுவோர் கவனத்திற்கு**

ஓரிரு தினங்களில் Mitsui (மிற்சுயி) Atlas (அட்லஸ்) சிமெந்து விற்பனைக்கு வர இருப்பதால் ஓடர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

சில தினங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஹெந்தல (HENDALA) கப்பல் மூலம் ஏற்ற இருப்பதால் வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளவும்:

**ஜெசீபா ஏஜென்ஸி**

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2407 (C/13013)


## மரண அறிவித்தல்

### கந்தையா சிவப்பிரகாசம்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 123/2 கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (20.09.2000) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - கற்பகத்தின் மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - தங்கம்மாவின் மருமகனும், சிரோன்மணியின் அன்புக்கணவரும், குகதாசன் (பிரான்ஸ்), உத்திரதாசன் (தபால் ஊழியர், புங்குடுதீவு), சந்திரதாசன் (பிரான்ஸ்), சிவநிதி, சிவகலா, சிவகஜந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற பத்மாவதி, சேதுராசா, காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், சுந்தரம், மீனாம்பாள், புவனேஸ்வரி, இரத்தினபூபதி, பேபி, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும், சிவகாமசுந்தரி, காந்தசொரூபி, திருமகட்கரசி, மகேந்திரன் (ஆசிரியர், யா/கொடிகாமம் GTMS, பிறைற்றின், சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும், சாரங்கி, சாரா, சேரன், கோபிகா, வேணுகோபிகாந், தனுஷியா, விதுர்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.09.2000) வியாழன் பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.மகேந்திரன்
(மருமகன்)

*123/2 கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(78633)




த.சுபத்திரன் (றொபேட்)

இல. 3

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக் குழு - 2 | X

ஈ.பி.ஆர்.எல்.எஃப்



அ.வரதராஜப்பெருமாள்

இல. 1

(78234)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.